விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + IV

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 14 புதன்கிழமை (27.05.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 160

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

வர்த்தமானியை நீக்கும் அதிகாரம்

## அரசியலமைப்புச் சட்டப்படி ஜனாதிபதிக்கு இல்லை

### உயர் நீதிமன்றில் சட்டமா அதிபர்

(கொழும்பு)

பாராளுமன்றத்தைக் கலைத்து ஜனாதிபதி வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை நீக்கும் அதிகாரம் அரசியலமைப்புச் சட்டத்தில் ஜனாதி பதிக்கு வழங்கப்படவில்லை 15

## பாடசாலை ஆரம்பிப்பது தொடர்பில் ஜூன் 2ஆம் வாரத்தில் தீர்மானிக்கப்படும்

### கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும



(கொழும்பு)

இன்னும் இரண்டு வாரங்களுக் குப் பின்னரே பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து தீர்மானிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார். கோவிட் - 19 நோய்த் தொற்றுப் பரவல் சமூக 15

## கொரோனா வைரஸ் பரவுதல் அதிகரிக்கலாம்

### உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

உலகம் முழுவதும் நாடுகள் முடக்கல் வரையறைகளை தளர்த் தினாலும் கொரோனா வைரஸ் பரவலின் முதல் அலையிலேயே உலக நாடுகள் இன்னும் இருப் பதாக உலக சுகாதார அமைப்பின் அவசர வேலைத்திட்டங்களுக் கான பிரதான அதிகாரி மைக் ராயன் எச்சரித்துள்ளார்.

அத்துடன் நோய் தொற்றா ளர்களின் உச்சமான இரண்டா வது சந்தர்ப்பம் ஏற்படக்கூடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கூறுகையில்,

கொரோனா வைரஸ் காரண மாக கடுமையாக பாதிக்கப்பட்ட பல நாடுகளில் புதிய மரணங் 15

### மீண்டும் நாடு முடக்கப்படலாம்

# ஒரேநாளில் 137 பேருக்கு கொரோனா வைரஸ்

### முதற் தடவையாக அதிக தொற்றாளர்கள்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக் கப்பட்ட 137 பேர் நேற்று ஒரே நாளில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். இலங்கை யில் அதிக தொற்றாளர்கள் கண்டு பிடிக் கப்பட்டது இதுவே முதற் தடவையா கும். இதனால் நாடு மீண்டும் முடக்கப் படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. 15

## பொதுத் தேர்தலுக்கு எதிரான மனுக்கள்

### இன்று வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாராளுமன்றம் கலைக்கப்பட் டமை மற்றும் ஜூன் 20 ஆம் திகதி பொதுத்தேர்தலை நடத்துவதை ஆட்சேபனைக்கு உட்படுத்தி தாக் கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணை இன்று வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. 15

## அமைச்சர் தொண்டமான் நேற்று காலமானார்



(கொழும்பு)

அமைச்சர் ஆறுமுகம் தொண்ட மான் தனது 55ஆவது வயதில் நேற்றிரவு காலமானார்.

வீட்டிலிருந்து வீழ்ந்து விபத் துக்குள்ளான நிலையில் 15

தரம் - 5 புலமைப்பரிசில் மற்றும் க.பொ.த (சா/த) கர்நாடக சங்கீத வினாத்தாள்கள் உள்ளே...

### பெயர்போன சித்திரவதையாளர்

## சி.ஐ.டி பணிப்பாளராக கோட்டாவால் நியமனம்

### இலங்கைக்கான உதவிகளை நிறுத்துக சர்வதேச நாடுகளிடம் ஜஸ்மின் சூக்கா கோரிக்கை



(ஜெனிவா)

பெயர்போன சித்திரவதையாளர் எனச் சொல்லப்படும் ஒருவர் சி.ஐ.டிக்குப் பொறுப்பாளராக கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டமையால் இலங்கைக்கான உதவிகளை நிறுத்துமாறு சர்வதேச நாடுகளிடம் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் பணிப்பாளர் ஜஸ் மின் சூக்கா கோரிக்கை விடுத்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்

### தொற்று நோயியல் தடுப்புப் பிரிவு தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தவருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் மே.21 வரை மொத் தம் 19 ஆயிரத்து 474 டெங்கு நோயாளிகள் அடையாளம் காணப் பட்டுள்ளதாக தொற்று நோயியல் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இம்மாதம் மூன்றாம் வாரத் தின் முடிவில், நாடு முழுவதும் டெங்கு நோயாளிகளின் 15

### நீதிமன்ற தீர்ப்பின் பின்னரே

## பொதுத் தேர்தலுக்கான திகதி தீர்மானிக்கப்படும்

### தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானம்

(கொழும்பு)

பொதுத் தேர்தலை நடத்துவதற் கான திகதியொன்று இன்னமும் தீர்மானிக்கப்படாதுள்ள நிலையில் நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் தேர்தல் திகதி 15

# பொதுத் தேர்தலை நடத்த நீதிமன்றம் சாதகமான பதிலை வழங்கும்

## அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ நம்பிக்கை

(கொழும்பு)

பொதுத் தேர்தலை நடத்துவதற்கு உரிய தீர்வினை நீதிமன்றம் வழங்கும் என்ற நம்பிக்கை உள்ளதென ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பு இராஜகிரியவில் அமைந்துள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்றைய தினம் நடை பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முக்கியஸ்தரும் துறைமுக அபிவிருத்தி அமைச்சருமான அருந்திக பெர்னாண்டோ தேர்தல்கள் ஆணைக்குழு மீது கடும் விமர்சனங்களை முன்வைத்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஒரு சிலரது செயறபாடுகள் சந்தேகத்திற்குரியதாக அமைந்துள்ளது. இவ்வாறு சுயாதீன ஆணைக்குழு வில் இருந்து ஒருதலைப்பட்சமாக செயற்படுபவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும். கோவிட் - 19 வைரஸை கட்டுப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

எதிர்த் தரப்பினர் மாத்திரமே தங்களின் அரசியல் தேவைகளுக்காக அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சிக்கின்றார்கள். அபிவிருத்தி அடைந்த நாடுகளை காட்டிலும் அரசாங்கம் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தியுள்ளது. ஜனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் முப்படையினரது ஒத்துழைப்பு ஊடாகவே சுகாதார தரப்பினர் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்கள்.

தற்போது கடற்படையினர் மாத்திரமே அதிகளவு கொரோனா வைரஸ் தொற்றுக் குள்ளானவர்களாக அடையாளம் காணப்படுகின்றார்கள்.



கடற்படையினை கண்காணிக்க விசேட வழிமுறை செயற்படுத்தப்பட்டுள்ளன. பொதுத் தேர் தலை நடத்துவதற்கான பாதுகாப்பான சூழல் தற்போது காணப்படுகின்றது.

பொதுத் தேர்தல் தொடர்பில் நீதிமன்றம் உரிய தீர்வினை வழங்கி ஜனநாயக உரிமையினை பாதுகாக்கும் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

### கட்டாரிலுள்ள 273 இலங்கையர்களை

# இன்று நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை

(கொழும்பு)

கட்டாரில் தங்கியுள்ள 273 இலங்கையர்கள் இன்றைய தினம் நாட்டுக்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

இதற்கமைய அவர்கள் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விமானம் மூலம் இன்று நாட்டுக்கு அழைத்து வரப்படவுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கட்டாரின் டோகா நகரில் இருந்து நேற்று காலை 5.45 மணிக்கு இலங்கையர்கள் 273 பேரை ஸ்ரீலங்கன் விமானத்தின் மூலம் நாட்டிற்கு அழைத்துவர ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குவைத்தில் இருந்து நாட்டிற்கு அழைத்துவரப்பட்டவர்களில் 90 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து, கட்டாரிலிருந்து நாட்டிற்கு வரவிருந்த விமானத்தை தற்காலிகமாக இரத்து செய்ததாக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

இந்நிலையில், குறித்த விமானம் இன்று இலங்கைக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

### முகமாலைப் பகுதியில் அகழ்வு

# விடுதலைப் புலிகளின் சீருடை, மனித எச்சங்கள், துப்பாக்கிகள் மீட்பு

(முறிகண்டி)

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முகமாலைப் பகுதியில் காணப்பட்ட எலும்புக்கூடுகள் தொடர்பான முதல்நாள் அகழ்வுப் பணிகள் நேற்று இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் நேற்று முதலாம் கட்ட அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்போது துப்பாக்கிகள் மூன்று, மக சீன்கள் எட்டு, அவற்றுக்குரிய தோட்டாக்கள், கைக்குண்டு கள் 2 என்பன மீட்கப்பட்டிருந்தன. பெண்களின் ஆடை மற்றும் விடுதலைப் புலிகளின் சீருடை யுடன் எலும்புக்கூடுகளும் மீட்கப்பட்டன.



அதேவேளை அந்த எலும்புக்கூட்டு எச்சத்துடன் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பயன்படுத்துகின்ற இலக்கத்தகடு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. குறித்த தகட்டில் "த வி பு - ஞா - 0164" எனக் குறிப்பிடப்பட் டுள்ளது.

குறித்த இலக்கம் விடுதலைப்புலிகள் அமைப்பின் மகளிர் பிரிவான சோதியா படையணியினர் பயன்படுத்தும் இலக் கம் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

அதேவேளை, தொடர் இலக்கம் 0164 ஆகக் காணப்படுவதால் அவர் குறித்த பிரிவினரின் மூத்த போராளியாக இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது.

இதேவேளை முதலாம் கட்ட அகழ்வுப் பணிகள் நேற்று நிறைவுக்கு வந்துள்ள நிலையில் எதிர்வரும் 02ஆம் திகதி அடுத்த கட்ட அகழ்வுப் பணிகள் நடைபெறும் என தெரிவிக்கப்படுகின்றது. (ம-3,100)


**மாகாண சமூக சேவைகள் திணைக்களம்**

**வட மாகாணம்**

**பெறுகைகளுக்கான அழைப்பு**

**கைதடி அரச முதியோர் இல்லத்திற்கான ஒப்பந்த அடிப்படையில் சுத்திகரிப்பு சேவையைப் பெற்றுக் கொள்ளல் - 2020/21**

1. வடமாகாண சமூகசேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த சுத்திகரிப்பு சேவைகள் வழங்குநரிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.
2. விலைக்கேள்விதாரர் சுத்திகரிப்பு சேவை தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒரு நபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
3. யாழ்ப்பாண மாவட்டத்தில் தலைமை அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. விலைமனுதாரர் கேள்வி கோரப்படும் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கான சேவை வழங்கல் தொடர்பில் மூன்று (03) வருடத்திற்கு குறையாத முன் அனுபவத்தினைக் கொண்டிருத்தல்வேண்டும்.
5. பொருத்தமான கேள்வி வைப்பு பணம் செலுத்தப்பட்டமை பெறுகைகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
6. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர் இத்திணைக்களத்தில் கிடைக்கும் "Application for Bid Documents" என்ற படிவத்தினை பூர்த்தி செய்து பெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா.2,000 காசாக செலுத்தி தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் 28.05.2020 தொடக்கம் 18.06.2020 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.
7. "Cleaning Service - 2020/21, Elders Home Kaithady, Reference No NP/24/2/3/Cle.Ser/2020 -21" என்ற விபரம் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத விபரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
8. விலைக்கேள்விகள் 22.06.2020ஆந்திகதி 14:00 மணிக்கு முன்பதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ இத் திணைக்களத்தில் பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ் விலைக் கேள்விகள் 22.06.2020ஆந் திகதி 14.00 மணிக்கு திறக்கப்படும்.
9. விலைமனுதாரர்கள் அல்லது எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும்போது அனுமதிக்கப்படுவர்.
10. கிடைக்கப் பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.

**வனஜா செல்வரட்ணம்,** தலைவர்,
திணைக்கள பெறுகைகள் குழு,
மாகாண சமூக சேவைகள் திணைக்களம் வ.மா
கண்டி வீதி, கைதடி.

தொலைபேசி: **0213211256** தொலைநகல்: **0212231725**
மின்னஞ்சல்: **ssdeptnp@gmail.com**

(C-9621)


### கொரோனா அறிகுறியுள்ளோரை ஏற்றி வந்த

# நோயாளர் காவு வண்டி மீசாலைப் பகுதியில் விபத்து

(யாழ்ப்பாணம்)

கொரோனா தொற்று அறிகுறிகளுடன் உள்ளோரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வந்த நோயாளர் காவு வண்டியும் டிப்பர் வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகின. எனினும் தெய்வாதீனமாக எவருக்கும்பாதிப்பில்லை.




இந்தச் சம்பவம் தென்மராட்சி மீசாலை புத்தூர் சந்திக்கருகாமையில் ஏ9 வீதியில் நேற்று பிற்பகல் 2.40 மணியளவில் இடம்பெற்றது.

இரணைமடு விமானப் படையின் தனிமைப்படுத்தல் முகாமிலிருந்து கொரோனா தொற்று அறிகுறியுடன் உள்ள மூவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வந்த நோயாளர் காவு வண்டியும் டிப்பர் வாகனமுமே இவ்வாறு மோதி விபத்துக்குள்ளாகியிருந்தன.

இதன்போது உயிர் சேதமோ காயங்களோ ஏற்பட்டிருக்கவில்லை.


அதனையடுத்து, கொரோனா தொற்று அறிகுறி உள்ள மூவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நோயாளர் காவு வண்டி மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

டிப்பர் வாகனத்தை தடுத்து வைத்துள்ள கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ம-3)

# கிழக்கு மாகாணத்தில் தொல்லியல் செயலணி

# தோலிருக்க பழத்தை அபகரிப்பதாக அமையும்

## சீறுகிறார் ஸ்ரீநேசன்



(ஏறாவூர்)

**கிழக்கு மாகாணத்தில் தொல்லியல் இடங்களை கண்டறிவதற்கான செயலணியென்பது பேரின அடிப்படைவாத நில அபகரிப்பின் உத்தியா? தொல்லியல் இடங்களைக் கண்டறியும் நில வேட்டையா? என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் கேள்வியெழுப்பினார்.**

கிழக்கு மாகாணத்தில் தொல்லியல் இடங்களை கண்டறிவதற்கான செயலணி தொடர்பில் அவர் நேற்றைய தினம் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவ் அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, கிழக்கு மாகாணத்தில் தொல்லியல் இடங்களைக் கண்டறிவதற்காக பாதுகாப்புச் செயலர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தலைமையில், செயலணி ஒன்றை அமைக்கப்போவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இவ்விடயமானது சிறுபான்மைத் தமிழ் பேசும் மக்களின் பூர்வீகமான நிலங்களை கையகப்படுத்துகின்ற சூழ்ச்சியோ என்று ஐயமுற வேண்டியுள்ளது என்றும் அரச காணி, மகாவலிக் காணி, வனத்திணைக்களக் காணி, வனஜீவராசிக் காணி, எல்.ஆர்.சி. காணி, தொல்லியல் காணி என மத்தியரசு பல்வகைக் காணிகளை தன்னகப்படுத்தியுள்ளது.

இவ்வாறிருக்க மென்மேலும் அரசு காணிகளை கையகப்படுத்துவதென்பது தோலிருக்கப் பழத்தினை அபகரிப்பதாக அமைகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொரோனாத் தாக்கத்தினால் உலக இயக்கமே முடங்கி அடங்கிக் கிடக்கின்றது. ஆனால், எமது நாட்டில் ஓசை எழாமல், தேசிய ஒற்றுமைக்கு எதிரான திட்டமிட்ட பேரினவாதக் கருமங்கள் நடைபெறுகின்றன.

மரண தண்டனைக்குரிய கொலையாளிகள் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பால் விடுதலை, தொல்லியல் காணிகள் என்ற பெயரில் காணிகள் பேரினமயமாக்கல், ஒவ்வாத பதவியேற்றங்கள், வடக்குக் கிழக்கு மாகாணங்களில் குறிப்பாகக் கொரோனாத் தொற்றற்ற பிரதேசங்களுக்கு, பிற மாவட்டங்களில் இருந்து கொரோனாத் தொற்றாளர்கள் கொண்டு வருகை, சிவில் சேவை இராணுவமயமாக்கல் போன்ற வெறுப்பூட்டும் கருமங்கள் நடைபெறுகின்றன.

அதிகார வேட்கை, அடிப்படைவாத நாட்டம் ஒருபோதும் நாட்டிற்கு நன்மையளிக்காது. தேசிய ஐக்கியத்தையும் வளர்க்காது என்று அவ்வறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

## குணமடைந்தோர் 712

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களில் மேலும் 17 பேர் குணமடைந்தனர்.

இந்நிலையில், குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 712 ஆக அதிகரித்துள்ளது.

அதேநேரம், கொரோனாத் தொற்றுறுதி செய்யப்பட்ட நிலையில், சிகிச்சை பெற்று முழுமையாக குணமடைந்த கடற்படையினரின் எண்ணிக்கை 332 ஆக அதிகரித்துள்ளது.

மொத்த தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 182 ஆக அதிகரித்துள்ளது. அத்தோடு 460 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற்று வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று சந்தேகத்தில் 79 பேர் நாட்டின் பல்வேறு வைத்தியசாலைகளிலும் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கொரோனாத் தொற்றுக்குள்ளான 10 பேர் இலங்கையில் இதுவரை உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு

# மரத்தினால் வீழ்ந்தவனை மாடு ஏறி மிதித்தது போல் மக்களை மிதிக்கிறது அரசு



## வேலுகுமார் கொதிப்பு

(கண்டி)

வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் மக்களுக்கு சலுகைகளை வழங்கி அவர்கள் மீண்டெழுவதற்கு நேசக்கரம் நீட்ட வேண்டிய அரசாங்கம், அவர்கள் மீது வரிச் சுமைகளைத் திணித்து மனிதநேயமற்ற வகையில் ஆட்சியை முன்னெடுக்கிறது என ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளருமான வேலுகுமார் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக அவர் நேற்று செவ்வாய்க்கிழமை விடுத்துள்ள ஊடக அறிக்கையில், 'கொரோனா வைரஸின் தாண்டவத்தால் பொருளாதாரம் ஆட்டம் கண்டுள்ளது. வர்த்தகத் துறைகளெல்லாம் வீழ்ச்சி கண்டுள்ளன. நிறுவனங்கள் ஆட்குறைப்பு செய்கின்றன. சம்பளம்கூட குறைந்தளவிலேயே வழங்கப்படுகின்றது. இதனால் நாள் சம்பளத்தையும் மாதச்சம்பளத்தையும் நம்பியிருந்தவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, மக்களுக்கு சலுகைகளை வழங்க வேண்டிய இக்கால கட்டத்தில் 5 ஆயிரம் ரூபாயிலும் அரசியல் நாடகத்தை அரங்கேற்றிவிட்டு, தற்போது அத்தியாவசியப் பொருட்களின் விலையையும் அதிகரித்து அப்பாவி மக்களின் வயிற்றில் அடித்துள்ளது.

இதனால் பருப்பு, சீனி, ரின்மீன், மிளகாய் உட்பட பல பொருட்களின் விலைகள் அதிகரிக்கும். அது ஏனைய உணவு பொருட்களின் விலையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையானது மரத்தில் இருந்து கீழே விழுந்தவனை மாடு ஏறி மித்தது போல் உள்ளது.

கொரோனா, ஊடரங்குச் சட்டம், தொழில் இன்மை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மேலும் தலையிடியை கொடுத்துவிட்டு, தேசிய உற்பத்தியை பாதுகாக்கவே இப்படியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அரசாங்கம் அம்புலிமாமா கதை சொல்கின்றது.

எமது நாட்டு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். உரத்தட்டுப்பாடு நிலவுகின்றது. உற்பத்திக்கேற்ப விலை இல்லை. எனவே, உரிய திட்டங்கள் எதுவும் இல்லாமல் திடீரென பொருளாதாரத் திட்டங்களை வகுப்பது எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும்.

அதேவேளை, உலக சந்தையில் எரிபொருட்களின் விலை நன்றாகவே குறைந்துள்ளது. அதன் அனுகூலத்தை அரசாங்கம் பாவனையாளர்களுக்கு வழங்கவில்லை. ஏற்கனவே அரச ஊழியர்களின்' சம்பளத்தில் கைவைத்துள்ள அரசாங்கம் தற்போது மக்களின் அடிவயிற்றிலும் கைவைத்துள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# புதிய பாராளுமன்ற அமர்வில் 125 பேருக்கே ஆசன வசதி

## வைத்திய அதிகாரிகள் ஆலோசனை

(கொழும்பு)

புதிய பாராளுமன்றம் கூடிய பின்னர் ஒரேநேரத்தில் சபையில் 125 பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் அமரக்கூடிய வகையில் இடங்களை ஒதுக்குவதற்கான ஆலோசனைகள் சிரேஷ்ட வைத்திய அதிகாரிகளால் முன்வைக்கப்பட்டன.

கொவிட் - 19 தொற்று நோய்க்கு மருந்தொன்று கண்டுபிடிக்கும் வரையில் இவ்வாறானதொரு நடவடிக்கை முன்னெடுப்பது ஆரோக்கியமனதாக அமையும் எனவும் ஆராயப்பட்டது.

கொவிட் -19 ஜனாதிபதி செயலணி, பாராளுமன்ற செயலாளர், அரச அதிகாரிகள் மற்றும் சுகாதார அதிகாரிகள் மட்டத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த யோசனை முன்வைக்கப்பட்டது.

அதாவது பொதுத் தேர்தலின் பின்னர்புதிய பாராளுமன்றம்கூடும் நிலையில் சபையில் 225 உறுப்பினர்களையும் அமர்த்துவது ஆரோக்கியமான விடயமல்ல என்பதை சுட்டிக்காட்டியுள்ள அதேவேளை சபையில் ஒரே சந்தர்ப்பத்தில் 125 உறுப்பினர்கள் அமரக் கூடிய வகையில் சபையில் மாற்று ஆசன ஒதுக்கீட்டு ஏற்பாடுகள் செய்வது ஆரோக்கியமானது எனவும்ஏனைய 100 பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்கென பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் ஒதுக்கப்பட்டுள்ள அறைகள், குழு அறைகள் போன்றவற்றில் அமர முடியும் எனவும் யோசனையை முன்வைத்தனர். (ஜ-4)

# கட்டாரில் சிக்கியுள்ளவர்களுக்கு தங்குமிட வசதி ஏற்படுத்த வேண்டும்

## ரவிநாத் ஆரியசிங்க அறிவுறுத்து



(கொழும்பு)
கட்டாரில் சிக்கித் தவிப்ப வர்களுக்கு தங்குமிட வசதி களை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள் ளது.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரவிநாத் ஆரியசிங்க இவ் அறிவுறுத்தலை வழங்கி னார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் "நேற்று முன் தினம் திங்கட்கிழமை அட்ட வுணைப்படுத்தப்பட்டிருந்த கட் டாரிலிருந்து பயணிக்கும் ஸ்ரீல ங்கன் எயார்லைன்ஸ் விமா னம் இரத்துச் செய்யப்பட்டது.

இதுகுறித்து வெளிநாட்டு அலு வல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுடனான ஆலோ சனைகளின் பேரில், இடை க்கால நடவடிக்கையாக அங்கு சிக்கித் தவிப்பவர்களுக்கு தங்கு மிட வசதிகளை உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்குமாறு கட் டாரிலுள்ள இலங்கையின் பதில் தூதுவருக்கு நான் அறிவுறுத் தல்களை வழங்கியுள்ளேன்" என அவர் மேலும் தெரிவித் தார். (ஜ-4)

# மியன்மாரிலுள்ள இலங்கையர்களால் சுகாதாரப் பொருட்கள் நன்கொடை




(கொழும்பு)
கொரோனா வைரஸ் பரவு வதைக் கட்டுப்படுத்துவதற்காக மியன்மாரிலுள்ள இலங்கை யர்களால் கடற்படைக்கு பல சுகாதாரப் பொருட்கள் நன் கொடையாக வழங்கப்பட்டன.

நாட்டிற்குள் கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்ப டுத்த இலங்கைக் கடற்படை மேற் கொள்கின்ற நடவடிக்கை களுக்கு தேவையான சுமார் 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள சுகாதாரப் பொருட் கள் மியன்மாரில் உள்ள இலங்கையர்களால் கடற் படைக்கு வழங்கப்பட்டன.

மியன்மாரில் இருந்து இலங்கையர்கள் குழு ஒன்று கொண்டு வந்த Myanmar Airways International விமான நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு சிறப்பு விமானம் இந்த சுகாதாரப் பொருட்களை நாட்டிற்கு கொண்டு வந் தன.

3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள இந்த சுகா தாரப் பொருட்களில் 25 சுகா தார உடைகள், 6 ஆயிரம் அறுவை சிகிச்சை முகமூடி கள் மற்றும் ஆயிரத்து 500 முகமூடிகள் உள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஜ-4)

# நாடு முழுவதும் ஊரடங்கு தளர்வு வழமைக்கு திரும்பிய மக்கள்





(கொழும்பு)
நாடு முழுவதும் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 4 மணி முதல் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட நிலையில், மக்க ளின் நாளாந்த நடவடிக்கை களும் வழமைக்கு திரும்பின.

இதேநேரம் சுமார் 60இற்கும் மேற்பட்ட நாட்களுக்குப் பின்னர் கொழும்பு, கம்பஹா தவிர ஏனைய மாவட்டங்களுக்கிடை யிலான போக்குவரத்துக்கு அனு மதி வழங்கப்பட்டுள்ளதால், அத்தியாவசியத் தேவைகளின் நிமித்தம் மக்கள் நேற்றுக் காலை வேளையிலேயே வெளிமாவட் டங்களுக்கு சென்றனர்.

இதற்கமைய மலையகத்தில் ஹற்றனில் இருந்து கண்டி உட்பட ஏனைய சில மாவட் டங்களுக்கான அரச மற்றும் தனியார்துறை போக்குவரத்து சேவைகள் இடம்பெற்றன.

ஹற்றன், நுவரெலியா, பொகவந்தலாவை, கொட்ட கலை, மஸ்கெலியா, நோர்வூட், பூண்டுலோயா, தலவாக்கலை ஆகிய நகரங்களில் அனைத்து வர்த்தக நிலையங்களும் திறக் கப்பட்டன.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றாதவர்கள் எச்சரிக்கப் பட்டனர். பேருந்துகளில் ஆசனங் களின் அளவுக்கேற்பவே பயணி கள் அனுமதிக்கப்பட்டனர். மது பான விற்பனை நிலையங்களும் திறக்கப்பட்டன.

இதேவேளை வவுனியா மற்றும் மன்னார் நகரில் மக்கள் தமது வழமையான செயற்பாடு களை முன்னெடுத்திருந்தனர்.

அரசதிணைக்களங்களில் ஊழியர்கள் கடமைக்கு திரும்பி யிருந்ததுடன், மக்களும் தமது தேவைகளை நிறைவு செய்வ தற்காக அரச திணைக்களங் களை நோக்கிச் சென்றிருந் தனர். (ஜ-4-285-299)

# இறுதியாண்டு மருத்துவபீட மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பம்

(கொழும்பு)
இறுதியாண்டு மருத்துவபீட மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் நோக்கில் ஜூன் மாதத்தின் இரண் டாம் வாரத்தில் பல்கலைக்கழகங் களின் வைத்திய பீடங்களை ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர் மானித்துள்ளது.

சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க உள் ளிட்ட அதிகாரிகளுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னரே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக பல்கலை க்கழக மானியங்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழகங்கள் திடீ ரென மூடப்பட்டதன் காரணமாக இறுதியாண்டு வைத்திய பீட மாணவர்கள் 600 பேருக்கு மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்ட தாகவும் இதனால் அவர்களுக்கு பரீட்சையை எதிர்கொள்ளச் சந் தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக வும் பல்கலைக்கழக மானியங் கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

எனினும் மாணவர்களின் சுகாதாரப் பாதுகாப்புத் தொடர் பில் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தினர்.

அத்துடன் விடுதிகளில் தங்கி யிருக்கும் போது சமூக இடை வெளி பேண வேண்டியதன் அவ சியம் குறித்து சுகாதார அதிகா ரிகள் வலியுறுத்தியமை குறிப்பிட த்தக்கது. (ஜ-8)

# 3 வர்த்தக நிலையங்களில் தீ!

(கொழும்பு)
அம்பலாங்கொட நகரில் ஏற் பட்ட தீப்பரவலில் 3 வர்த்தக நிலை யங்கள் முற்றாகத் தீக்கிரையா கின.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் குறித்த தீப் பரவல் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மின்சார உபகரணங்கள் விற் பனை செய்யும் வர்த்தக நிலை யம் ஒன்றில் ஏற்பட்ட தீ அருகி லுள்ள 2 வர்த்தக நிலையங்க ளுக்கும் பரவியது.

காலி தீ அணைப்புப் பிரிவின ரும் அம்பலாங்கொடப் பொலி ஸாரும் இணைந்து தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீப்பரவல் ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை அறியப்படாத நிலையில் மேலதிக விசாரணை களை அம்பலாங்கொடப் பொலி ஸார் முன்னெடுத்து வருகின் றனர். (ஜ-8)

# பாதுகாப்பு வேலிக்குள் சிக்கிய கரும்புலி



(மஸ்கெலியா)
மஸ்கெலியா நல்லதண்ணி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லக்ச பான தோட்ட வாழமலைப் பிரி வில் நேற்றுக்காலை கரும்புலி ஒன்று மரக்கறித் தோட்டப் பாது காப்பு வேலிக்குள் அகப்பட்டது.

இதையடுத்து குறித்த சம்பவ இடத்திற்கு நல்லதண்ணி பொலிஸ் நிலையப் பொறுப்பதி காரி, வனத்துறை அதிகாரிகள் மற்றும் பொலிஸார் மக்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். (ஜ-4)

# போதைப் பொருட்களுடன் 378 பேர் கைது

(கொழும்பு)
மேல் மாகாணத்தில் நேற் றைய தினம் 387 பேர் போதைப் பொருட்களுடன் கைது செய்ய ப்பட்டனர்.

மேல் மாகாணத்தில் பொலி ஸாரினால் நேற்று மேற்கொள் ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது கஞ்சா, ஹெரோ யின், ஐஸ் உள்ளிட்ட போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

ஹெரோயினுடன் மட்டும் 153 பேர் கைது செய்யப்பட்டமை குறிப்பிட தக்கது. (ஜ-2-8)

# ஷெஹான் மதுஷங்க இடைநீக்கம்

(கொழும்பு)
இலங்கை கிரிக்கெட் வீரர் ஷெஹான் மதுஷங்க அனை த்துவித கிரிக்கெட் போட்டிகளில் இருந்து இடைநீக்கப்பட்டுள்ள தாக இலங்கை கிரிக்கெட் சபை யின் செயலாளர் தெரிவித்தார்.

போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டமையால் அவர் இவ்வாறு இடை நீக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# இராசிபலன்

27.05.2020
வைகாசி 14, புதன்கிழமை
பஞ்சமி முன்னிரவு 10.44 மணிவரை
புனர்பூசம் காலை 6.23 மணிவரை
பூசம் பின்னிரவு 5.49 மணிவரை
சுபநேரம் 4.22-5.52 மணிவரை
இராகுகாலம் 11.52-1.22 மணிவரை
சந்திராஷ்டமம் மூலம்
சுபமுகூர்த்த தினம்

வளவன்

**மேஷம்**: கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், உறவினர்களின் வருகையுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**ரிஷபம்**: நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்**: நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், சேமிப்பை அதிகரிக்கும் வாய்ப்புண்டு, நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்**: விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்**: பிறரது பொறுப்புக்களையும் பொறுப்பேற்பதால் மனச்சஞ்சலங்கள் கூடும், திடீர் பயணங்கள் ஏற்படலாம், கொள்கைப்பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் எண்ணம் உருவாகும்.

**கன்னி**: இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம், செல்வநிலை உயரும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, போசன நன்மையுண்டு.

**துலாம்**: பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்**: சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், உறவினர்களின் வருகையுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**தனுசு**: மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்படலாம், தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, தேவையற்ற மஸ்தாபங்கள் ஏற்படலாம்.

**மகரம்**: சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு, நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள்.

**கும்பம்**: கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மீனம்**: தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

ஆணுக்கு தன் உறுதியுண்டு, பெண்ணிற்குத் தன் வழியுண்டு.

# அரசியலுக்குள் இழுக்காதீர்கள்!

## அனில் ஜாசிங்க வேண்டுகோள்

(கொழும்பு)

**தன்னையும் ஏனைய அரச அதிகாரிகளையும் அரசியல் சர்ச்சைகளுக்குள் இழுக்க வேண்டாம் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க வேண்டுகோள் விடுத்தார்.**



நேற்று அரச தொலைக் காட்சி நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

கடந்த மூன்று தசாப்த காலமாக நாட்டிற்காக சேவையாற்றிய தன்னை போன்ற அரசாங்க ஊழியர்கள் எந்தக் கட்சியையும் சார்ந்து செயற்பட்டது இல்லை எனவும் நாட்டின் அனைத்து அரசாங்கங்களாலும் பல நெருக்கடிகளைச் சந்தித்துள்ளதாகவும் ஆனாலும் அவர்களிடமிருந்து விலகி ஓடியதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எந்தவொரு அரசியல் கட்சியையும் சார்ந்து செயற்படாத தம்மைப் போன்ற அதிகாரிகள் பலர் உள்ளனர் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுமாறும் தெரிவித்தார்.

தேர்தல் செயற்பாடுகளை தங்களால் முன்னெடுக்க முடியும் என்றே ஜனாதிபதியின் செயலாளருக்கான தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டிய அவர் தான் சில நிபந்தனைகளை விதித்துள்ளதாகவும் தெரிவித்தார். (ஐ-4)

# ஒரு கொலையை மறைக்க ஒன்பது கொலை செய்த நபர்!

## தெலுங்கானாவில் கொடூரம்

(தெலுங்கானா)

தெலுங்கானாவில் புலம் பெயர் தொழிலாளர்கள் ஒன்பது பேரைக் கொலை செய்த நபர் கைது செய்யப்பட்டார்.

தெலுங்கானா மாநிலம் வாரங்கல் புறநகரில் உள்ள கீசு கொண்டா காவல் எல்லைக்குட்பட்ட பகுதியில் விவசாயக் கிணறு ஒன்றில் இருந்து ஒன்பது சடலங்கள் மீட்கப்பட்டன.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலங்களின் உடலில் எந்தக் காயமும் இல்லை எனவும். இதனால் அவர்கள் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டிருந்தனர்.

இதன் தொடர்ச்சியாக கீசு கொண்டா பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர். இவ் விசாரணையின் முடிவில் பீகாரைச் சேர்ந்த சஞ்சய் குமார் என்பவர் கைது செய்யப்பட்டார்.

விசாரணைகளில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன் ரபீகா என்ற பெண்ணை சஞ்சய் குமார் கொலை செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

குறித்த கொலைச் சம்பவத்தை மறைப்பதற்காக தொடர்ச்சியாக அவர் 9 கொலைகளை செய்துள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## திருமதி. மாணிக்கம் பரஞ்சோதி



கடந்த 27.04.2020 இறைபதம் அடைந்த திருமதி. **மாணிக்கம் பரஞ்சோதி** அவர்களின் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று புதன்கிழமை (27.05.2020) அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அனைவரும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிறப்பு 09.06.1933 இறப்பு 27.04.2020
திதி: சதுர்த்தி

M.P.C.S.LANE
கோப்பாய் வடக்கு.
0777169210
தகவல்:
பிள்ளைகள்.
(ஐ71டி)

# கொரோனா முற்றாக நீங்கி விடவில்லை

# மக்களே! அவதானமாக செயற்படுங்கள்

## யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

**நாட்டில் கொரோனா தொற்று முற்றாக நீங்கிவிட வில்லை. யாழ்ப்பாண மக்கள் அவதானமாக செயற்பட வேண்டியது அவசியம் என யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ எச்சரித்தார்.**

நேற்று யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியதன் அவசியம் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்பாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடு முழுவதும் நேற்றைய தினம் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணக் குடாநாடு வழமைக்கு திரும்பியது.

இந்நிலையில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் பொதுமக்களுக்கு நோய்த் தொற்றிலிருந்து எவ்வாறு பாதுகாத்தல் என்பது தொடர்பான விழிப்புணர்வு செயற்பாட்டினை முன்னெடுத்திருந்தனர்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவிக்கையில், பேருந்துகளில் பயணம் செய்வோர் கட்டாயமாக முகக் கவசம் அணிந்து பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து பேருந்தில் பயணம் செய்வோர் அனைவரும் கைகளைக் கழுவி சுத்தப்படுத்திய பின்னரே பேருந்தில் ஏற அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டதோடு பேருந்துகளில் சமூக இடைவெளியைப் பேண வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ஜ-4-9-114)

## சாவகச்சேரியில் தனிமைப்படுத்தல் முகாம்? அச்சத்தில் மக்கள்; மறுக்கிறது இராணுவம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி -கச்சாய் வீதியில் அமைந்துள்ள 523ஆவது படைத் தலைமையகத்தில் (தம்பு தோட்டம்) கொரோனா தனிமைப்படுத்தல் முகாம் அமைக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் அச்சம் கொள்கிறார்கள். அத்துடன் குறித்த தனிமைப்படுத்தல் முகாமை நிறுத்தக்கோரி நேற்று செவ்வாய்க்கிழமை காலை வீதிக்கு வந்த மக்கள் தமது எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர். இது தொடர்பாக அப்பகுதி மக்கள் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த இரண்டு மூன்று தினங்களாக தம்புதோட்டம் படை முகாமில் மக்கள் குடிமனைகளுக்கு மிக அருகாமையில் வேலி ஓரமாக அவசர அவசரமாக பாரிய கொட்டகை அமைத்து வருகின்றனர். அது தனிமைப்படுத்தல் முகாம் எனவும் அருகில் உள்ள மக்களுக்கு இராணுவத்தினர் தெரியப்படுத்தியிருந்தனர். குறித்த தனிமைப்படுத்தல் முகாமின் மலசலகூடம் தமது வீடுகளுக்கு மிக அருகாமையில் காணப்படுகிறது எனவும் இரவிரவாக இராணுவத்தினர் குறித்த முகாமில் கட்டில்,மெத்தை போன்றவற்றை கொண்டு வந்து வைத்து துரித கதியில் செயற்பட்டு வருகின்றனர்.

இது தொடர்பாக கிராம அலுவலர், பிரதேச செயலர் மற்றும் அரசியல் கட்சிகளுக்கும் தெரியப்படுத்தியுள்ளோம். இப் பகுதியில் முதியவர்கள், நோயாளர்கள் மற்றும் சிறுவர்கள் என ஏராளமானோர் உள்ளனர். இப் பகுதியில் தனிமைப்படுத்தல் முகாம் அமைத்தால் எமது உயிருக்கு உத்தரவாதம் இல்லை. தனிமைப்படுத்தல் முகாமிற்குள் ஆட்களைக் கூட்டி வந்தால் நாம் வீடுகளை விட்டு வெளியேறி ஆலயங்களில் தஞ்சமடைவோம். இப்பகுதியில் இராணுவ முகாம் இருப்பது எமக்கு பிரச்சினையில்லை. எமது வீடுகளுக்கு அருகாமையில் தனிமைப்படுத்தல் முகாம் அமைப்பதே எமக்கு பிரச்சினையாகவுள்ளது. என மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக இராணுவத்தினர் தெரிவிக்கையில், இது கொரோனா தனிமைப்படுத்தல் முகாம் அல்ல. அண்மையில் விடுமுறையில் வீடுகளுக்குச் சென்ற தம்புதோட்டம் படை முகாமைச் சேர்ந்த இராணுவ வீரர்களே இதில் தங்க வைக்கப்பட்டு பின்னர் கடமைக்குச் செல்லவுள்ளனர். வெளியாட்கள் எவரும் உள்ளீர்க்கப்படமாட்டார்கள். எனவே மக்கள் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனத் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு வந்த சாவகச்சேரி பொலிஸார் மக்களை கூட்டம் கூட வேண்டாம் என அறிவுறுத்தியதுடன், இது தொடர்பாக கடிதம் மூலம் பிரதேச செயலருக்கு தெரிவிக்குமாறும் கூறினர். குறித்த மக்கள் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிச் செயலாளர் கஜேந்திரன், அக்கட்சியின் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள் கலந்து கொண்டு தமது எதிர்ப்பினையும் வெளியிட்டிருந்தனர். (2-5-30)

## பேருந்து சாரதிகளின் விடுமுறை இரத்து!

(கொழும்பு)

மறு அறிவித்தல் வரை இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளில் கடமையாற்றும் சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் விடுமுறை இரத்துச் செய்யப்பட்டது

இலங்கை போக்குவரத்து சபையின் பிரதி பொது முகாமையாளர் ஏ.எச்.பண்டுக்க அறிவித்துள்ளார். கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கு இடையிலான பேருந்து போக்குவரத்து நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## வெளிமாவட்டங்களுக்கிடையிலான பேருந்து சேவைகள் வழமைக்குத் திரும்பின



(யாழ்ப்பாணம்)

கொழும்பு, கம்பஹா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து சேவைகள் கொழும்பு, அக்கரைப்பற்று, கண்டி, திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் கொரோனா நோய் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் முகமாக கடந்த மார்ச் மாதம் முதல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் காரணமாக மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து தடைப்பட்டு வந்த நிலையில் நேற்று முதல் நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டு மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்து சேவைகள் யாவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக யாழ்.மத்திய பேருந்து நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.தனராஜ் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், நேற்று அதிகாலையில் இருந்து வெளி மாவட்டங்களுக்கான சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்புக்கான சேவை நீர்கொழும்பு வரைக்கும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இச் சேவையானது ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் ஒவ்வொரு நாளும் ஒரு பேருந்து சேவை இடம்பெறுமெனவும் இச் சேவை காலப்போக்கில் அதிகரிப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும், பேருந்து சேவையைப் பெற்றுக் கொள்ளும் பொதுமக்கள் சுகாதார திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தங்களின் பாதுகாப்பான பயணத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

பொதுமக்களின் போக்குவரத்தை இலகுபடுத்தும் முகமாக உள்ளூர் சேவைகளும் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்தோடு தனியார் போக்குவரத்து சேவைகளும் வழமை போல் ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்று வருகிறது. எனினும் வெளிமாவட்டங்களுக்கான தனியார் பேருந்து சேவைகள் ஆரம்பிக்கப்படவில்லை. வடக்கு மாகாணத்துக்குட்பட்ட மாவட்டங்களுக்கு மட்டுமே தனியார் போக்குவரத்துச்சேவை இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (2-5-101)

## மிக எளிமையாக மஹோற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -சப்பச்சி மாவடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை வரை இடம்பெறவுள்ளது. தற்போதைய நாட்டு நிலைமையை கருத்திற் கொண்டு சுகாதாரப் பகுதியினரின் அனுமதி யைப் பெற்று மிக எளிமையாக இடம்பெறவிருப்பதாக ஆலய தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர்.

மஹோற்சவ காலத்தில் காலை 9.30 தொடக்கம் நண்பகல் 12 மணி வரை ஸ்நன அபிஷேகம் மாத்திரம் இடம்பெறும். ஆலயத்திற்கு வரும் பொதுமக்கள் கை, கால்களை கழுவியபின் ஆலயத்திற்குள் பிரவேசிக்க வேண்டும் முகக் கவசம் அணிவது கட்டாயம். 25 பக்தர்களுக்கு மேல் ஆலயத்திற்குள் கூட முடியாது சமூக இடைவெளி பேணப்பட வேண்டும். எனவே அடியவர்கள் குறித்த சுகாதார நடைமுறைகளை கருத்திற் கொண்டு உற்சவம் சிறப்பாக இடம்பெற ஒத்துழைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளனர். (2-5-30)

# கொரோனா வைரஸ் தாக்கத்தால் 2 இலட்சம் பேர் வேலையிழப்பு!

## வசந்த சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**கொரோனா வைரஸ் தொற்று நோயால் தனியார் துறையில் 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் ஏற்கனவே வேலை இழந்துவிட்டார்கள் என ஒன்றிணைந்த நிறுவனங்களின் தொழிற்சங்கத் தலைவர் வசந்த சமரசிங்க சுட்டிக்காட்டினார்.**



கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தனியார் துறையின் ஊழியர்கள் மீது அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை என்றும், இந்த விவகாரத்தை அமைச்சரவையில் முன்வைக்க சம்பந்தப்பட்ட அமைச்சர் எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

"இப்போது, மக்கள் மீண்டும் பணிகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர். ஆனால் தனியார் துறையில் வேலை செய்பவர்கள் மீது பெரும் தாக்கம் உள்ளது. இந்த நிலைமை காரணமாக 50 வயது பெண்கள், உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் தற்காலிகத் தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் இந்தப் பிரச்சினை குறித்து பல தடவைகள் எடுத்துக்கூறியும் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை" எனவும் அவர் குற்றம் சாட்டினார். இதேவேளை, தற்போதைய நிலைமையால் தனியார் துறை நிறுவனங்களில் பணிபுரியும் 1.1 மில்லியன் ஊழியர்கள் வேலை இழக்க நேரிடும் என ஆய்வுகள் தெரிவித்துள்ளன என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# அம்பாறையில் கடல் கொந்தளிப்பு

## மீனவர்கள் பாதிப்பு



(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் கல்முனை பிரதேச பகுதிகளில் கரை வலை மீன்பிடித் தொழிலானது முற்றுமுழுதாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக கரையோர மீனவர்கள் கவலை வெளியிட்டனர்.

பெரிய நீலாவணை, மருதமுனை, கல்முனை உள்ளிட்ட பிரதேசங்களில் கடந்த சில தினங்களாக ஏற்பட்ட கடல் மட்ட வேறுபாடும் கடல்கொந்தளிப்பு நிலையுமே இதற்கான காரணமென அவர்கள் சுட்டிக்காட்டினர்.

நீரானது கரைவலை தோணிகளை நிறுத்தி வைக்கும் இடங்களைக் காவு கொண்டுள்ளதுடன்,

மணல் பகுதிகளையும் அதிகமாக உள்ளே இழுப்பதனாலும் தோணிகளைத் தள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். (ஜ-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 3<br>கி.பா: 1 செவ் 10 இல்<br>உயரம்: 174cm<br>தகைமை/தொழில்: MBBS. Doctor<br>எதிர்பார்ப்பு: MBBS, வைத்தியர்கள் மட்டும் எதிர்பார்க்கப்படுகின்றது<br>தொ.இ: B/10785 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 16 ½ செவ் 5 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:பட்டதாரி ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன்<br>தொ.இ: G/7869 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: 35 செவ் 12 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. ஜேர்மனியில் வேலை செய்கின்றார்<br>எதிர்பார்ப்பு: உள்நாட்டு வெளிநாட்டுப் பெண்<br>தொ.இ: B/10786 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 14.5 செவ் 2 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: B.Sc, முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: கௌரவ அரசதொழில்<br>தொ.இ: G/7873 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>கி.பா:28 செவ் 4இல் உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. அவுஸ்திரேலியாவில்வேலைசெய்கின்றார்<br>எதிர்பார்ப்பு: உள்நாட்டு வெளிநாட்டுப் பெண்<br>தொ.இ: B/10787 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 1<br>கி.பா: சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 175cm<br>தகைமை/தொழில்: B.A, Management Assistant<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன் இவர் விவாகரத்தானவர்<br>தொ.இ: G/7879 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா: 40 செவ் 9இல் உயரம்:172 cm<br>தகைமை/தொழில்:க.பொ.த.சா/த. பலசரக்குக்கடை (சொந்தம்)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்தபெண்<br>தொ.இ: B/10788 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா: 34 செவ் 4 இல்<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. தனியார் வங்கி ஊழியர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/7893 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# உலகை உலுக்கும் கொரோனா

## 3 இலட்சத்து 47 ஆயிரத்து 903 பேர் பலி!



(ஜெனிவா)

உலகளாவிய ரீதியில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 55 இலட்சத்து 59 ஆயிரத்து 218 ஆக அதிகரித்துள்ளதுடன் 3 இலட்சத்து 47 ஆயிரத்து 903 பேர் உயிரிழந்தனர்.

உலகின் 200இற்கும் மேற்பட்ட நாடுகளில் மனிதப் பேரழிவை ஏற்படுத்தி வரும் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த முடியாது உலக நாடுகள் திணறிக்கொண்டிருக்கின்றன.

முடக்கம், ஊரடங்கு, சமூக இடைவெளி, சுகாதாரக் கட்டுப்பாடுகள் என பல வழிகளைக் கையாண்டும் கொரோனாவைக் கட்டுக்குள் கொண்டுவர முடியாதுள்ளது.

இந்தத் தொற்றிலிருந்தது 2 இலட்சத்து 366 ஆயிரத்து 551 பேர் குணமடைந்து சென்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)


# இந்திய சாஸ்திரியார் வருகை

ஓம் சக்தி அருள் வாக்குப்பெற்ற பரம்பரை ஜோதிடர்
சிங்கப்பூர்,மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ்பெற்ற
**இரத்தினசாமி** அவர்கள்
ஜாதகம்,கைரேகை,எண்கணிதம்
திருமணத்தடை, கல்வித்தடை, வெளிநாடு செல்லத்தடை, மற்றும் குழந்தை பாக்கியம், காதலில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, தொழில் முன்னேற்றமின்மை, புதிய தொழில் தொடங்க மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்
முன்பதிவுக்கு: 0715748358, 0713929703
இல.101, Kandy Rd, Jaffna.(யாழ்.நீதிமன்றத்திற்கு அருகில்)




# யாழ்ப்பாண கீரைவகை மூலிகைகளும் அவற்றின் மருத்துவ முக்கியத்துவங்களும்




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

சித்தமருத்துவம் மிகவும் எளிமையான மருத்துவ முறை என்று எண்ணிவிடக் கூடாது. இது பல்வேறு யோக, ஞான, வைத்திய விடயங்களை தன்னகத்தே கொண்டு உலகை ஆளும் பெருங்கடல். இயற்கையின் அற்புதம் சித்தர் பெருமக்களால் கண்டறியப்பட்ட சித்த மருத்துவமானது சித்தர்களின் நெறிமுறைகளுக்கு உட்பட்டு வாழ்வியலின் ஓர் அங்கமாக உணரப்பட்டது.

ஓர் மூலிகையின் நோய் நீக்கத் தன்மையானது அப்பொருளின் வடிவம், நிறம், சுவை, தன்மை (வீரியம்) விபாகம் (Post di-







gestive stage) ஆகிய அம்சங்களைக் கொண்டு இந்த மூலிகையானது இந்த நோயைத் தீர்க்கும் என்று சித்தர்களால் வகுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் கீரை வகை மூலிகைகளுள் அறக்கீரை, முளைக்கீரை, முடக்கொத்தான், ஆரைக் கீரை, கறிவேப்பிலை ஆகியவற்றின் மருத்துவப் பண்புகளை பார்த்தோம்.

**புதினா**

Name - Mentha arvensis

புதினா இலைகளுடன் புளி, உப்பு, மிளகாய் ஆகியவற்றை அளவாகச் சேர்த்து அரைத்து துவையல் தயாரித்து சோற்றில் பிசைந்து உண்ண நல்ல பசி உண்டாகும். சிறுநீர் நன்கு கழியும். புதினாக் கீரையுடன் சிறிதளவு இஞ்சி, கொஞ்சம் மிளகு அளவாகப் பனைவெல்லம் சேர்த்து தண்ணீர் கூட்டி அடுப்பில் வைத்து சுண்டக் காய்ச்சிய குடிநீரை பருக வாந்தி, வயிற்றுப் பொருமல், பசியின்மை தீரும்.

புதினாக்கீரை, உழுத்தம் பருப்பு, பொட்டுக்கடலை, புளி ஆகியவற்றை நன்றாகச் சேர்த்து அரைத்து சிறிதளவு வாயில் போட்டு தண்ணீர் குடிக்க குமட்டல், வாந்தி குணமாகும்.

**100 கிராம் புதினாக் கீரையிலுள்ள சத்துக்கள்**

புரதம்-4.8 கிராம்
கொழுப்பு- 0.6 கிராம்
நார்ப்பொருள்- 2.0 கிராம்
மாச்சத்து-5.8 கிராம்
கல்சியம்-200 மி.கி.
விற்றமின் C-27 மி.கி.
ஒட்சாலிக்கமிலம்-33 மி.கி.
பொஸ்பரஸ்- 4 மி.கிராம்
போலிக்கமிலம்-114 மைக்கிரோகிராம்

❖புதினா இலை, வேப்பிலை இரண்டையும் சம அளவு எடுத்து அரைத்து தினமும் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் இரத்தம் தூய்மையாகும்.

❖உலர்ந்த புதினா இலையோடு கறுப்பு எள்ளு சம அளவு எடுத்து குடிநீர் காய்ச்சி பருகினால் மாதவிலக்கு கோளாறுகள் குணமாகும்.

புதினாவை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொண்டால் அதிகரித்த பித்தம், வயிற்றெரிவு குறையும்.

**புதினாக்கீரைத் துவையல்**

புதினா இலை - 1 சுண்டு
செத்தல்மிளகாய் - 6
சிறிய வெங்காயம் - 6
வெள்ளைப்பூடு - 4 பல்லு
கடுகு - 1 தேக்கரண்டி
உழுத்தம் பருப்பு - 2 தேக்கரண்டி
பெருங்காயம் - 1 சிட்டிகை
உப்பு - தேவையான அளவு
எண்ணெய் - 2 தேக்கரண்டி
புளி - தேவையான அளவு

புதினா இலைகளை கழுவி நறுக்கிக் கொள்ள வேண்டும்.

செத்தல் மிளகாய், வெந்தயம், பூடு முதலியவற்றை துப்புரவு செய்து கொள்ள வேண்டும்.

வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு, உழுத்தம்பருப்பு, பெருங்காயம் முதலியவற்றை தாளித்து எடுத்துக் கொள்ளவும்.

அடுத்து சிறிதளவு எண்ணெயில் செத்தல் மிளகாயை வறுத்து வெங்காயம், பூண்டு முதலானவைகளையும் வதக்கி பின்பு புதினா இலைகளையும் வதக்கிக் கொள்ள வேண்டும்.

உப்பு, புளி, மிளகாய் முதலியவற்றை அரைத்து அத்துடன் வெங்காயம், பூடு, புதினா இலை முதலானவைகளையும் அரைத்து தாளித்து கடுகு, உழுத்தம் பருப்பு முதலானவைகளுடன் வதக்கிய தேங்காயையும் சேர்த்து அரைத்து காலை ஆகாரங்களுக்கு சேர்த்துக் கொள்ளவும். குடல் நன்கு பலப்படும். ஜீரணக் கோளாறுகள் நீங்கி, வயிற்று பொருமலும் நீங்கும். இக் கீரைவகை மூலிகைகள் எவ்வித பக்க விளைவுகளுமற்ற உணவு, உப உணவாகவும் பயன்படுத்தக் கூடியவையுமாக இருப்பதால் இயற்கையாகவே உடம்பால் ஏற்றுக்கொள்ளக் கூடியவையுமாகும் என்பது சிறப்பம்சமாகும்.

**பிரண்டை**

Botanical Name - cissus quadrangularis

பிரண்டையின் இளந்தண்டை நெய் சேர்த்துவதக்கி சாப்பிட்டால் சுவையின்மை நீங்கி நன்றாகப் பசி எடுக்கும்.

பிரண்டையை வதக்கி துவையல் செய்து சாப்பிட்டால் புளித்த ஏப்பம் குணமாகும்.

பிரண்டைக் கீரையுடன் இஞ்சி, உள்ளி ஆகியவற்றைச் சேர்த்து துவையல் செய்து சாப்பிட்டால் பித்தத்தால் ஏற்படும் மயக்கம் தீரும்.

பிரண்டையை கணு மற்றும் நார் நீக்கி நெய்யில் வதக்கி மிளகு மற்றும் உப்பு சேர்த்து சாப்பிட்டால் இளைத்த உடல் பெருக்கும்.

இளந்தண்டை இலையுடன் உலர்த்தி பொடித்து, சுக்குத்தூள், மிளகுத்தூள் சிறிது சேர்த்துச் சாப்பிட வயிற்று நோ, செரியாமை நீங்கும். இதையே பாலில் கலந்து சிறிது கற்கண்டு சேர்த்து அருந்த உடலைத் தேற்றி, வன்மையைக் கொடுக்கும். இதைத்தான் "சதை பிரண்டாலும் சரி செய்திடும்'' பிரண்டை என்ற பழமொழியால் குறிப்பிடுவர்.

பிரண்டையில் இலைகளை கலவைக் கீரையுடன் சேர்த்து சமைத்து சாப்பிட அஜீரணம் தீரும். நாரில்லா இளம் நுனிக்கொடியில் ஒரு துண்டை எடுத்து வல்லாரை, கொத்தமல்லிக்கீரை அல்லது புதினா சேர்த்து தேங்காய், தக்காளி, கரட் சேர்த்து சட்னி செய்து உட்கொள்ள உடல் வலுப் பெறும்.

**100 கிராம் பிரண்டையில் உள்ள சத்துக்கள்**

புரதம்- 1.2 கிராம்
கொழுப்பு- 0.3 கிராம்
நார்ப்பொருள்- 1.8 கிராம்
மாச்சத்து- 7.3 கிராம்
கல்சியம்-.650 மில்லி கிராம்
பொஸ்பரஸ்- 50 மில்லி கிராம்
இரும்பு-2.1 மில்லி கிராம்

உயிர்ச்சத்து C உம் காணப்படும்.

**பிரண்டைத் துவையல்**

பிரண்டை - இரண்டு துண்டுகள்
இஞ்சி - 1 துண்டு
உழுத்தம் பருப்பு - 1/2 கப்
தேங்காய் எண்ணெய் - 4 தேக்கரண்டி
துருவிய தேங்காய் - 12 கப்
எள் - 2 தேக்கரண்டி (வறுத்தது)
உப்பு - சிறிதளவு

பிரண்டையை துப்புரவாக்கி கழுவிக் கொள்க. சிறிய துண்டுகளாக நறுக்கி கொள்ளவும். வாணலியில் எண்ணெய் விட்டு பிரண்டைத் துண்டுகளை வதக்கி எடுக்கவும். வாணலியில் உழுத்தம்பருப்பு, எள், தேங்காய்த்துருவல் முதலானவைகளை வறுத்து எடுக்கவும்.

வதக்கிய பிரண்டைத் துண்டுகளுடன் இஞ்சிக் கிழங்கை தோல்சீவி கழுவி சேர்த்து அரைத்து பின் வதங்கிய உழுத்தம்பருப்பு, எள், தேங்காய்த்துருவல் முதலானவைகளை சேர்த்து அரைத்து எடுத்து இதற்கு உப்பு, சிறிது நீர்விட்டு அரைத்து எடுக்கவும். இதனை சாதத்துடன் பயன்படுத்தலாம்.

முறிந்த என்புகளை சீர் செய்யவும் உதவும். அதே போல் வயிற்று பொருமல், அஜீரணம் போன்றவற்றையும் நீக்கக் கூடியது.

(தொடரும்)

# சுமைக்கு மேல் சுமையை மக்கள் மேல் சுமத்தி சுகமாக சுகபோகம் அனுபவிக்கிறது அரசு

## திஸ்ஸ அத்தநாயக்க சீற்றம்

(கொழும்பு)

**அரசாங்கம் மக்கள் மீது சுமைக்கு மேல் சுமையை சுமத்தி தமது வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முயற்சித்து வருவதாக குற்றம் சாட்டிய ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க, நாடு எத்தகைய அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்தாலும் நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதே அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றும் தெரிவித்தார்.**

ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வைரஸ் பரவல் காரணமாக பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வரும் மக்களுக்கு சலுகையைப் பெற்றுக் கொடுப்பதற்கு பதிலாக அரசாங்கம் சுமைக்குமேல் சுமையை அவர்கள் மீது சுமத்தி அரச வருமானத்தை அதிகரிக்க முயற்சிக்கின்றது.

கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் அதனைத் தடுப்பதற்கு முயற்சிக்காமல் ரின் மீனுக்கும் பருப்புக்கும் சலுகை வழங்குவதாக குறிப்பிட்ட அரசாங்கம், தற்போது சலுகை வழங்கவேண்டிய தருணத்தில் அதனையும் மக்களிடமிருந்து பறித்துள்ளது. அத்தியாவசியப் பொருட்களுக்கான வரியை அதிகரித்துள்ள நிலையில் பொருட்களின் விலை அதிகரிப்புக்கான வழியை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

நாடு எத்தகைய அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்தாலும் அதனை சாதகமாக பயன்படுத்தி மக்களுக்கு வழங்கவேண்டிய சலுகைகளை பெற்றுக் கொடுக்காமல் இருப்பதல்ல அரசாங்கத்தின் கடமை, எந்த நிலைமையிலும் மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரிப்பதே அரசாங்கத்தின் பிரதான கடமையாகும்.

ஆனால் தற்போதைய அரசாங்கம் மக்கள் பணத்தை கொள்ளையிட்டு தமது முதலீட்டை அதிகரிக்க முயற்சித்து வருகின்றது. இந்நிலையில் மக்களுக்கு மேலும் சுமையை ஏற்படுத்தாமல் வரி அதிகரிப்பு தொடர்பில் வெளியிட்டுள்ள சுற்றுநிருபத்தை நீக்கி மக்களுக்கு சலுகையை பெற்றுக் கொடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.



இதேவேளை இலங்கை மக்களை வைரஸ் பரவலிலிருந்து பாதுகாப்பது தொடர்பிலே நெருக்கடி நிலைமைகள் தோற்றம் பெற்றுள்ள போதிலும் இந்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று மீண்டும் நாட்டுக்கு திரும்பி வரமுடியாமல் இருக்கும் நபர்களை அழைத்து வருவது தொடர்பில் கவனம் செலுத்தாமல், சீஷெல்ஸ் நாட்டில் வைரஸ் தொற்றுக்குள்ளான நபர்களை இங்கு அழைத்துவந்து காப்பாற்ற முயற்சிப்பது என்பது அரசாங்கத்தின் மீது எழுந்துள்ள சந்தேகத்தை மேலும் அதிகரித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## கைதானோர் 1543

(கொழும்பு)

ஊரடங்குச் சட்டத்தை மீறிய ஆயிரத்து 543 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. இது தொடர்பில் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவிக்கையில்,

ஆயிரத்து 543 பேர் கைது செய்யப்பட்டதுடன் அவர்கள் பயணித்த 445 வாகனங்களும் கைப்பற்றப்பட்டன.

கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி தொடக்கம் நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் 65 ஆயிரத்து 930 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 20 ஆயிரத்து 926 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்துள்ளது. (ஜ-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2045

**தர்சா**



நேற்று யூ டியூப்பில பார்த்த கடலை மா+ எலுமிச்சை பேஸ்பக் ஐ முகத்துக்கு பூசுவம்
அவனவன் ஊரடங்குல சோத்துக்கு வழியில்லாம சுத்துறான்... கடலை மாவில கை வைச்சா கைய உடச்சுப் போடுவன்

**லது**




சலூனுக்கும் சாவுக்கும் சென்று வந்தால் எதையும் தொடாமல் குளித்தபின் வீட்டிற்குள் வந்தார்கள் ஏன் தெரியுமா? தொற்றுக்கிருமிகள் தொடாமல் இருப்பதற்காக

**பகி**




இனியாவது இளந்தலைமுறையினர் மூத்தோர் சொல் வார்த்தையும் முழு நெல்லிக்காயும் முதலில் கசக்கும் பின்பு இனிக்கும் என்றுணர்ந்து வளமான வாழ்வு வாழ்தல் நன்று

**கஜி**




**விஸ்னு**



மனுசனாடா நீங்களெல்லாம்

**நிசா**



அழுவதை விட கஷ்டமானது அழாமல் இருப்பது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பாக மும்மொழிகளிலும் அறிவிக்க முடியும்

## வன்னி பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(நெளுக்குளம்)

**வவுனியா மற்றும் மன்னார் பகுதிகளில் இடம்பெற்றுவரும் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை தமக்கு வழங்குமாறு வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கு பொறுப்பான வன்னி பிரதிப் பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்த பொதுமக்களிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.**



மேற்குறித்த விடயம் தொடர்பாக நேற்று ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

வன்னி மாவட்டத்தில் இடம்பெறுகிற சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் பொதுமக்களிடமிருந்து கிடைப்பது மிகவும் குறைவாகவுள்ளது.

எனவே சமூக சீர்கேடுகள், மற்றும் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பான விடயங்களை பொதுமக்கள் தனக்கு நேரடியாக தெரிவிக்கமுடியும்.

அதன்மூலம் சட்டவிரோத செயற்பாடுகளை குறைக்கமுடியும் என்று எதிர்பார்ப்பதாகவும் இவ்வாறான தகவல்களை 076 622 4949, 076 622 6363, 024 222 2227 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாக dig.vavuniya@police.lk என்றமின் அஞ்சல் முகவரி ஊடாக மும்மொழிகளிலும் தெரிவிக்கமுடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (2-5-299)

## பிரதேச சபை உறுப்பினர் சடலமாக மீட்பு

(வெல்லாவெளி)

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் போரதீவுப்பற்று பிரதேச சபை உறுப்பினர் வயல் பிரதேசத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சங்கர்புரம் கிராமத்திலுள்ள அவரது வீட்டிலிருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை றாணமடு பகுதியிலுள்ள வயலுக்குச் சென்றவர் மாலை வேளையாகியும் வீடு திரும்பாததையடுத்து உறவினர்கள் வயலுக்குச் சென்று பார்த்தவேளை அவர் வீழ்ந்து கிடந்துள்ளார்.

இதனையடுத்து அவரை களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். இந்நிலையில், வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கு முன்னரே அவர் உயிரிழந்துள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

போரதீவுப்பற்றுப் பிரதேச சபையின் சின்னவத்தை வட்டார உறுப்பினரான தாமோதரம் மனோகரன் எனும் 45 வயதுடைய 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-2)

## கனடாவில் 5 நாட்களின் பின் அதிகளவு உயிரிழப்பு பதிவு

(ஒட்டாவா)

கனடாவில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிய 121 பேர் நேற்று முன்தினம் உயிரிழந்தனர். மேலும் புதிதாக ஆயிரத்து 12 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

ஐந்து நாட்களுக்குப் பின்னர் நேற்று முன்தினம் அதிகளவு உயிழப்பு ஏற்பட்டுள்ளது.

கனடாவில் இதுவரை 85 ஆயிரத்து 711 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ள நிலையில், 6 ஆயிரத்து 545 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## அரசாங்க அதிபரை சந்தித்த வன்னி கட்டளைத் தளபதி



வன்னிக்கான புதிய இராணுவத்தளபதியாக தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட வன்னி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தம்மிக்க ஜெயசிங்க-வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சமன் பந்துலசேன ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் 10.30 மணியளவில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. (2-5-299)

## குளோரோகுயினை உடன் நிறுத்துங்கள்

### உலக சுகாதார நிறுவனம் வேண்டுகோள்

(ஜெனிவா)

கொரோனாத் தொற்றாளர்களின் மருந்துவ நடவடிக்கையின் போது மலேரியா நோயைக் கட்டுப்படுத்தப் பயன்படும் ஹைறொக்சி குளோரோகுயின் மருந்து பயன்பாட்டை நிறுத்துமாறு உலக சுகாதார நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது. பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாகவே குறித்த மருந்தினை கொரோனா நோயாளர்களுக்கு வழங்குவதை நிறுத்த வேண்டும் என அந்நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

பல்வேறு நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வந்த பரீட்சார்த்த நடவடிக்கைகளின் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குறித்த மருந்தை கொரோனா நோயாளர்களுக்கு வழங்குவதை நிறுத்துமாறு உலக சுகாதார நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.

குறித்தமருந்தை கொரோனாத் தொற்றாளர்களுக்கு வழங்குவதனால் அது அவர்களுக்கு மரணத்தை ஏற்படுத்தும் என ஆய்வொன்றில் கண்டறியப்பட்டமையினை அடுத்தே மேற்குறித்த விடயத்தை உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. (ஜ-2-8)

## மைத்திரிக்கு எதிரான மனு செப்டெம்பரில் விசாரணைக்கு





(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அரசமைப்பை மீறியுள்ளாரென தீர்ப்பளித்து, தன்னை மீண்டும் பணியில் அமர்த்துமாறு உத்தரவிடுமாறு கோரி முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனு முர்து பெர்னாண்டோ, எஸ். துரைராஜா, யசன்ன கோதாகொட ஆகிய மூன்று நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## சத்தமாக கதைத்தாலும் கொரோனா பரவும்; ஆய்வில் வெளியாகிய அதிர்ச்சித் தகவல்

(வோஷிங்டன்)

கொரோனாத் தொற்று இருமல் மற்றும் தும்மலின் போது வெளியாகும் நீர்த்திவலைகளால் பரவுவதாகக் கூறப்பட்டது.

இந்நிலையில், கதைத்தாலும் கூட கொரோனா பரவும் என ஆய்வு ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

அமெரிக்காவின், தேசிய அறிவியல் மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஆய்வுக்கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அதில், ஒருவர் கதைக்கும் போது வெளியாகும் உமிழ்நீர் மூலமும் மற்றவர்களுக்கு வைரஸ் தொற்று பரவும் என்று கூறப்பட்டுள்ளது.

ஒரு நபர் கதைத்தால், அவரது வாயிலிருந்து ஒரு நிமிடத்திற்கு ஆயிரம் நீர்த்திவலைகள் வெளியாகின்றன.

இவை காற்றில் 8 இலிருந்து 14 நிமிடங்களுக்கு மிதந்தவாறே இருக்கக்கூடும் என்பதையும் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.


மற்றவர்களை விட சத்தமாக கதைக்கக்கூடிய நபர்கள் 10 மடங்கு அதிகமாக வைரஸைக் காற்றில் பரப்புவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உமிழ் நீர் திவலைகளின் நீளம் மற்றும் வேகம் ஒவ்வொரு நபரின் பேச்சு, வயது, பேசும் போது எழும்பும் சத்தத்தின் அளவு ஆகியவற்றைப் பொறுத்து மாறுபடுகிறது. (2-5)

# சுதந்திரத்திற்குப் பின் இலங்கை பாராளுமன்றத் தேர்தல்கள்

02

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



உரிய கட்சி அல்லது குழுவினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கையின் சதவீதத்திற்கமைய அவற்றிற்கான ஆசன உரித்துரிமை கிடைக்கப்பெறுவதோடு, வேட்பாளர்கள் பெற்றுக்கொள்கின்ற விருப்புகளின் எண்ணிக்கை ஒழுங்கு வரிசைக்கமைய உரிய உறுப்புரிமைக்கான வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தற்போது இலங்கையில் அமுல் செய்யப்படுகின்ற பாராளுமன்றத் தேர்தல்களில் இதற்கமையவே பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்ற முறைமையின் அடிப்படைத்தத்துவம் யாதெனில், ஒரு தரப்பினால் உரித்தாக்கிக் கொள்ளப்படுகின்ற உறுப்புரிமைகளின் எண்ணிக்கைக்கும் பெற்றுக் கொள்ளப்படுகின்ற வாக்குகளுக்குமிடையே குறிப்பான ஒரு விகிதாசாரமுறை பேணப்படுகின்றதென்பதாகும்.

விகிதாசார முறைமையின் கீழ் வாக்காளருக்கு உரிய கட்சியை (தரப்பை) மாத்திரம் தேர்ந்தெடுப்பதற்கு இடமளிக்கப்படுகின்ற ஒருமுறையும் சில நாடுகளில் செயற்படுத்தப்படுகின்றன. அத்தகைய நாடுகளில் வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியலின் தொடர் ஒழுங்கு தீர்மானிக்கப்படுவது கட்சியினாலேயேயாகும். இவ்வாறான பட்டியல் முறை பின்பற்றப்படுகின்ற நாடுகளில் கட்சிகளுக்கு தொகுதிகளின் உரித்துரிமை கிடைக்கப்பெறுகின்றமை காரணமாக தேர்தலின் போது அளிக்கப்பட்ட வாக்குகளில் ஒரு குறிப்பிட்ட வெட்டுப்புள்ளி வாக்குகளின் சதவீதத்தைப் பெற்றுக் கொள்வதும் கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் 12½ சதவீதமாகவிருந்த இச் சதவீத அளவு பின்னர் 5% சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தில் உட்சேர்க்கப்பட்ட முதலாவது சட்டத்திற்கமைய கட்சியினால் அல்லது குழுவொன்றினால் கையளிக்கப்பட வேண்டிய வேட்புமனுப்பத்திரமொன்றில் வேட்பாளர்களின் பெயர்கள் அவ்வேட்பாளர்களின் முன்னுரிமை ஒழுங்கிற்கமையவே (the order of Priority) உட்சேர்க்கப்பட வேண்டுமென விதிக்கப்பட்டிருந்தது. ஆயினும் இம்முறைமை 1988 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் திருத்தச்சட்டத்தினால் மாற்றியமைக்கப்பட்டது.

### இலங்கையின் மக்கள் பிரதிநிதிகள் நிறுவனங்களும் தேர்தல் முறைகளும்

இலங்கைப் பாராளுமன்றம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூர் அதிகாரசபைகள் ஆகிய மக்கள் பிரதிநிதிகளின் நிறுவனங்களுக்குரிய தேர்தல்கள் நியதிச் சட்டங்களுக்கமைய தேர்தல்களை நடத்தி உரிய காலப்பகுதிக்காக அவற்றிற்கான மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 1977 ஆம் ஆண்டு வரை தேர்தல் தொகுதிகளின் கீழ் எளிய பெரும்பான்மை முறைக்கமைய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத் தேர்தல்முறை, 1978 ஆம் ஆண்டின் புதிய அரசியலமைப்பைத் தொடர்ந்து விகிதாசாரமுறையாக மாற்றியமைக்கப்பட்டது. 1950களிலிருந்து பிரதிநிதித்துவ தேர்தல் தொகுதியின் கீழ் தேர்தலொன்றிலே போட்டியிட்ட வேட்பாளர்களில் அதிக வாக்குகளைப்பெற்ற வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும் முறையிலேயே உள்ளூர் அதிகாரசபைகளுக்கான பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

விகிதாசார தேர்தல்முறைகளின் அடிப்படைப் பண்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

i.பெரியளவிலான தேர்தல் மாவட்டமொன்றுக்காக உறுப்பினர்கள் குழுவொன்றை வாக்குமூலம் தேர்ந்தெடுத்தல்.

ii.அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்று அல்லது சுயேச்சைக்குழுவொன்றினால் வேட்பாளர் குழுவொன்றின் பெயர்கள் உள்ளடக்கப்பட்ட வேட்புமனுவொன்றை வேட்புமனுக்காலப்பகுதிக்குள் தெரிவத்தாட்சி அலுவலருக்குக் கையளித்தல். ஒவ்வொரு குழுவின் பட்டியலிலும் அந்தந்த மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படவுள்ள உறுப்பினர் எண்ணிக்கையை விட மூன்று மேலதிக வேட்பாளர்கள் அடங்கியிருக்க வேண்டும்.

iii.வாக்காளரொருவருக்கு தான் விரும்பிய கட்சிக்கு அல்லது சுயேச்சைக்குழுவிற்கு வாக்கையளிப்பதற்கும் அக் கட்சியை அல்லது குழுவை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வேட்பாளர்கள் மூவருக்கு விருப்புக்களை வெளிப்படுத்துவதற்கும் இடமளித்தல்.

iv.மக்கள் பிரதிநிதிகள் நிறுவனங்களுக்கு கட்சிகளிலிருந்தும் சுயேச்சைக்குழுக்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உரித்தாகுகின்ற பிரதிநிதிகளின் எண்ணிக்கை அத் தேர்தலில் உரிய கட்சி அல்லது குழு பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கமைய தீர்மானிக்கப்படல்.

v.இலங்கையில் வாக்களிப்பு திறந்த கட்சிப் பட்டியல் முறையில் நடைபெறுவதால், கட்சியிலிருந்து தெரிவாகவுள்ள உறுப்பினர்களின் ஒழுங்குவரிசையைக் கட்சிகள் தீர்மானிப்பதில்லை. ஒவ்வொரு வாக்காளரும் தாங்கள் விரும்பிய கட்சி அல்லது குழுவுக்கும் அக் கட்சி அல்லது குழுவினால் நியமிக்கப்பட்ட வேட்பாளர்களில் குறைந்தது மூன்று பேருக்கும் வாக்களிக்க முடியும். இவ்வாறு தனிப்பட்ட வேட்பாளர்கள் பெறும் விருப்பு வாக்குகளின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்தே ஒவ்வொரு கட்சி வேட்பாளர்களினதும் ஒழுங்கு வரிசை தீர்மானிக்கப்படுகின்றது.

vi.பாராளுமன்றத் தேர்தல்களில் நாடெங்கிலுமுள்ள அனைத்து தேர்தல் மாவட்டங்களுக்கும் கட்சிகள் / குழுக்கள் முழு நாட்டிலுமிருந்து பெற்றுக்கொண்ட வாக்குகளின் விகிதாசாரத்திற்கேற்ப 29 உறுப்பினர்கள் (தேசிய பட்டியல்) அவற்றிற்கு வழங்கப்படல். (அரசியல் அமைப்பின் 99அ ஆம் உறுப்புரைக்கமைய)

vii.பாராளுமன்றத் தேர்தலில் தேர்தல் மாவட்டங்களின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 1 உறுப்புரிமை (Bonus seat) தேர்தல் மாவட்டத்தில் அதிக வாக்குகளைப் பெற்றுக்கொண்ட கட்சிக்கு அல்லது குழுவிற்கு குறித்தொதுக்கப்பட்டதன் பின்னர் எஞ்சுகின்ற மீதமான உறுப்பினர்களின் எண்ணிக்கை மாத்திரம் கட்சிகளினதும் குழுக்களினதும் வாக்குகளின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கேற்ப பகிர்ந்தளிக்கப்படல்.

viii.பாராளுமன்றத்திற்குத் தேர்தல் மாவட்டமொன்றின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினரின் பதவியின் வெற்றிடத்தை நிரப்புதல் வேட்பாளருக்கு உரித்தான கட்சியின் / குழுவின் வேட்புமனுவில் எஞ்சியிருக்கின்ற அடுத்த வேட்பாளரை நியமனஞ் செய்வதனூடாக நிரப்புவதற்கு தெரிவத்தாட்சி அலுவலர் நடவடிக்கையெடுத்தல்.

ix.அரசியல் அமைப்பின் 99அ ஆம் உறுப்புரையின் கீழ் பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவரின் பதவி வெற்றிடத்தை நிரப்புதல் உரிய கட்சியிலிருந்து அல்லது சுயேச்சைக்குழுவிலிருந்து பெயர் குறித்த நியமனத்தினூடாக நிரப்பப்படுதல்.

இலங்கையின் மக்கள் பிரதிநிதிகளின் நிறுவனங்களுக்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதற்காக பிரதேசரீதியாக, மாகாணரீதியாக மற்றும் தேசியரீதியாக நடத்தப்படுகின்ற தேர்தல்கள் விகிதாசார பிரதிநிதித்துவ முறையை அடிப்படையாகக் கொண்டவை.

1977 ஆம் ஆண்டின் பின்னர் இம் முறையின் கீழ் நடத்தப்படுகின்ற தேர்தல்கள் காரணமாக ஏற்படக்கூடிய குறைபாடுகளாக பெரும்பாலானவர்கள் கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்களை பல்வேறுவழிகளிலும் வெளிப்படுத்துவதைக் காணமுடிகின்றது.

I.குறித்த ஒரு தொகுதிக்கு வகைகூறக்கூடிய பிரதிநிதியொருவர் வாக்காளருக்குக் கிடைக்கப்பெறாமை

II.தேர்தல் தொகுதிகள் விசாலித்துள்ளமையால் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக உரிய தரப்பினர்களுக்கு பெருந்தொகையான பணத்தை செலவழிக்க வேண்டியேற்பட்டுள்ளமை.

III.அதிகூடிய விருப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் ஒரே கட்சியின் அல்லது குழுவின் வேட்பாளர்களிடையே பிணக்குகள் ஏற்படலும் அப்பிணக்குகள் காரணமாக தேர்தல் காலங்களில் வன்முறைகள் உருவாதலும்.

IV.தேர்தல் வெற்றிக்காக மேற்கொள்ளப்படவேண்டிய தேர்தல் செலவினத்தை ஈடுசெய்யத்தக்க நிதியாற்றலுடன் கூடிய வேட்பாளர்களை போட்டியிட வைப்பதற்கு உரியதரப்பினர் நடவடிக்கையெடுத்தமைக்காரணமாக மக்கள் சேவைக்குப் பொருத்தமற்ற ஆட்கள்கூட தேர்தலில் போட்டியிட முன்வந்தமை.

V.வாக்குகளை எண்ணலும் முடிவுகளை வெளியிடலும் சிக்கல் மிகுந்த ஓர் அலுவலாகக் காணப்படுகின்றமை.

### தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயம்

நாட்டில் தேர்தல் தொகுதிகளை பிரித்தொதுக்கி சட்டவாக்கசபைக்கு பொதுமக்களின் வாக்குகள்மூலம் பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து அனுப்பும் சந்தர்ப்பம் இலங்கை மக்களுக்கு முதல் முதலாக வாய்க்கப்பெற்றது 1911 ஆம் ஆண்டிலேயே ஆகும். பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களிடமிருந்து இலங்கைக்கு சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னரிலிருந்தே இந்நாட்டில் செயற்படுத்தப்பட்ட பிரதான சட்டவாக்கச்சபை 1978 ஆம் ஆண்டுவரை பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டது. அக் காலப்பகுதிக்குள் அதற்கான பிரதிநிதிகளை நியமனம் செய்வதற்கான சட்டம் மற்றும் அதனோடு தொடர்புடைய செயன்முறை ஏறத்தாழ 70 ஆண்டுகள் பல்வேறு மாற்றங்களுக்கு இலக்காகியது. இலங்கையின் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் சட்டவாக்கத்துறைக்கு மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதத்திலேனும் வாக்குரிமையை அனுபவிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்த இலங்கையர்களுக்கு தமது வாக்கின்மூலம் 4 தனிஅங்கத்தவர் தொகுதிகளின் கீழ் 4 பிரதிநிதிகளை சட்டவாக்கசபைக்கு 1911 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றது. 1910 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க கட்டளைச்சட்டத்தின் 3 - 5 வரையிலான பிரிவுகளில் அவ்வொவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் இணைக்கப்பட்ட அக்காலத்தில் இலங்கையில் நடைமுறையிலிருந்த நிர்வாக மாவட்டங்களின் விபரங்கள் காட்டப்பட்டன.

இலங்கையின் பிரதான சட்டவாக்கச்சபைக்கு போலவே உள்ளூர் அதிகாரசபைகளுக்கான பிரதிநிதிகளும் தேர்தல்மூலம் தேர்ந்தெடுக்கப்படுவது தொடர்பான நீண்டகால அனுபவமொன்று இலங்கை மக்களுக்குக் காணப்படுகின்றது.

1911ஆம் ஆண்டு முதல் 1930 ஆம் ஆண்டு வரை அமுலிலிருந்த சட்டவாக்க சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் ஒரு பகுதியினர் மாத்திரம் இவ்வாறு தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1911 ஆம் ஆண்டில் 4 பேரும், 1920 ஆம் ஆண்டில் 16 பேரும் 1923 ஆம் ஆண்டில் 29 பேருமாக தொகுதி வாரியாக சட்டவாக்கசபைக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(தொடரும்)

# அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை அதிகரித்து மக்களை ஏமாற்றி வரும் அரசாங்கம்

## மனுஷ குற்றச்சாட்டு



(கொழும்பு)

**அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை அதிகரித்துவிட்டு தேசிய உற்பத்திகளைப் பாதுகாக்கவே இதனை மேற்கொண்டதாக அரசாங்கம் மக்களை ஏமாற்றி வருகிறது என ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார குற்றம் சாட்டினார்.**

காலியில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், விவசாயிகளை பாதுகாக்க எந்த வேலைத்திட்டமும் இல்லாமல் எவ்வாறு தேசிய உற்பத்தியை அரசாங்கம் பாதுகாக்கப் போகின்றது என அவர் கேள்வி எழுப்பியதுடன் அரசாங்கம் கடந்த வெள்ளிக்கிழமை முதல் அத்தியாவசிய பொருட்களுக்கான இறக்குமதி வரியை அதிகரித்துள்ளது.

அதனால் குறிப்பிட்ட பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. சாதாரண மக்கள் உணவுக்காக எடுத்துக்கொள்ளும் ரின் மீன், பருப்பு போன்ற பொருட்களினதும் விலை பாரியளவில் அதிகரித்துள்ளது.

இதனால் மக்கள் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாகத் தெரிவித்து ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தற்போது மக்களை நடுத்தெருவில் விட்டிருக்கிறது.

அத்துடன் தேசிய உற்பத்தியைப் பாதுகாக்கவே பொருட்களுக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறுகிறது. அரசாங்கத்தின் இந்த கூற்றானது சிறுபிள்ளைத்தனமானதாகும். விவசாயிகளுக்கு உரிய காலத்துக்கு உரம் இல்லாமல் இருக்கின்றது. அதனால் விவசாயிகள் வீதிக்கிறங்கியுள்ளனர். விவசாயிகளை பாதுகாக்க முடியாத அரசாங்கம் எப்படி தேசிய உற்பத்தியை பாதுகாக்கப் போகின்றது. விவசாயிகளை பாதுகாக்க அரசாங்கத்திடம் எந்த வேலைத்திட்டமும் இல்லை.

மேலும் அத்தியாவசிய இறக்குமதி பொருட்களுக்கான வரி அதிகரிப்பானது. தேசிய உற்பத்தியை பாதுகாப்பதற்காக என தெரிவிக்கின்றபோதும் தேசிய உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரசாங்கத்திடம் எந்த வேலைத் திட்டமும் இல்லை. விவசாயிகளுக்கு உரிய காலத்துக்கு உரத்தை வழங்காமல் எப்படி தேசிய உற்பத்தியை மேற்கொள்வது.

அதனால் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் அரசாங்கம் திண்டாடிக்கொண்டிருக்கின்றது. அரசாங்கத்தின் இயலாமையை மறைப்பதற்கே அத்தியாவசிய பொருட்களுக்கான இறக்குமதி வரியை அதிகரித்துவிட்டு தேசிய உற்பத்தியை பாதுகாக்கப்போவதாக மக்களை ஏமாற்றும் வகையில் பொய்ப் பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றது என அவர் மேலும் குற்றம் சாட்டினார். (ஐ)

# உயர்தரப் பரீட்சைக்கால அட்டவணை தொடர்பில் சமூக வலைத்தளங்களில் போலிச் செய்திகள்

## பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்சரிக்கை



(கொழும்பு)

இவ்வருடம் க.பொ.த.உயர்தரப்பரீட்சை ஆரம்பமாகும் திகதி உள்ளிட்ட கால அட்டவணை தொடர்பில் சமூகவலைத்தளங்களில் பகிரப்பட்டுவரும் தகவல்களில் எவ்வித உண்மைத்தன்மையும் இல்லையெனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்தார்.

சமூகவலைத்தளங்களில் உயர்தரப் பரீட்சை கால அட்டவணையொன்று பகிரப்பட்டுவரும் நிலையிலேயே கல்வியமைச்சு இதுகுறித்த தெளிவுபடுத்தல் அறிக்கையொன்றை நேற்று முன்தினம் வெளியிட்டது.

அவ் அறிக்கையிலேயே பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவ் அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இம்முறை உயர்தரப்பரீட்சை ஆரம்பமாகும் திகதி உள்ளிட்ட கால அட்டவணையொன்று சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வரும் நிலையில், அதில் எவ்வித உண்மைத்தன்மையும் இல்லை என்று சுட்டிக்காட்டிய ஆணையாளர் நாயகம் உயர்தரப்பரீட்சைகள் தொடர்பில் கல்வியமைச்சு மற்றும் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும் உத்தியோகபூர்வ அறிவித்தல்களை மாத்திரம் கருத்திற்கொண்டு பொறுப்புணர்வுடன் செயற்படுமாறும் கேட்டுக் கொண்டார்.

நாடு நெருக்கடியொன்றுக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில் கல்வி சார்ந்த விடயங்களில் தூரநோக்குடனேயே தீர்மானம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறிருக்கையில் சமூகவலைத்தளங்களின் ஊடாக இத்தகைய பொய்யான செய்திகள் பரப்பப்படுவது கவலைக்குரிய விடயமாகும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# தேர்தல்கள் ஆணைக்குழுவின் விசேட கலந்துரையாடல்கள்

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழுவின் விசேட கலந்துரையாடல்கள் இன்று மற்றும் நாளை இடம்பெறும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் திட்டமிடல் பணிப்பாளர் சன்ன சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் இதற்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள தேர்தலுக்குத் தேவையான வழிகாட்டல்களைத் திட்டமிடுவதே இக் கலந்துரையாடலின் நோக்கமாகும். சமூக விலகல் உட்பட சுகாதாரப் பிரிவின் பரிந்துரைகள் குறித்தும் இதன் போது கவனம் செலுத்தப்படும்.

தேர்தல் தொடர்பில் அரசியல் கட்சிகளின் கருத்துக்கள் மற்றும் யோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் தேர்தல்கள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-8)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## எது சொந்தம்...?

அவசரமாக ஓடிப்போய் ஒரு பேருந்திலே ஏறி உள்ளே ஒரு ஆசனத்தைப் பிடித்து உட்கார்ந்தார் ஒருத்தர்.

அது ஒரு நகர பேருந்து. நடத்துநர் பின்னால் நிற்கிறார்.

அதனாலே எழுந்து போய் அவரிடம் ஒரு ரூபாய் கொடுத்து ஒரு டிக்கெட் வாங்கிக் கொண்டு திரும்பி வந்தார்.

ஏற்கனவே இவர் உட்கார்ந்திருந்த இடத்திலே வேறு ஒருத்தர் உட்கார வந்தார்.

"சேர்...சேர்...அது என் இடம்" என்று சொல்லிக்கொண்டே ஓடிப்போய் இவர் தன்னுடைய பழைய இடத்தை மறுபடியும் பிடித்து உட்கார்ந்து விட்டார்.

இது நாம் தினசரி பார்க்கிற ஒரு காட்சிதான்.

பத்து நிமிடம் பிரயாணம் செய்வதற்குள்ளேயே அந்த ஆசனத்தை நமக்குச் சொந்தம் என்று நினைத்து விடுகிறோம். பல நாள் வாழ வேண்டிய வாழ்க்கை இது.

அதனாலே பார்க்கிறதையெல்லாம் நமக்குச் சொந்தம் என்று நினைக்கிறான் பாமர மனிதன்.

ஒரு பெரிய துறவி. அவர் ஒரு அரண்மனைக்கு வந்து ராஜாவைப் பார்த்தார்.

"என்ன வேண்டும்?" என்று கேட்டார் ராஜா.

"பயணிகள் தங்கும் இந்த இடத்திலே தூங்கிறதுக்கு கொஞ்சம் இடம் வேண்டும்" என்றார் துறவி.

ராஜாவுக்குக் கோபம் வந்து விட்டது. இது என்னுடைய அரண்மனை. இது பயணிகள் தங்குகிற விடுதி அல்லவா என்றார் ராஜா.

அந்தத் துறவி இப்போது ராஜாவைப் பார்த்துக் கேட்டார்... "உங்களுக்கு முன்னர் இது யாருக்குச் சொந்தம்?" என்றார்.

"இது என் தந்தையினுடையது" என்றார்.

சரி அவருக்கு முன்னர் இது யாருக்குச் சொந்தம்? என்றார். அவருக்கு முன்னர் இது என் பாட்டனாருக்குச் செ்ாந்தம் என்றார். "அவர் இப்போது எங்கே?" என்றார். அவரும் இப்போது இல்லை என்றார்.

"பார்த்தாயா அவர்களெல்லாம் இங்கே கொஞ்சக்காலம் தங்கி இருந்திட்டுப் போயிருக்கிறார்கள் அவ்வளவுதான். அப்படி இருக்கும்போது இது பயணிகள் தங்குகிற இடம் இல்லாமல் வேறு என்ன?" என்று கேட்டார் துறவி. ராஜா யோசித்தார்.

புறப்படுவதற்கு முன்னர் கொஞ்சக் காலம் தங்கி விட்டுப் போகும் இடம் தான் இது என்பதை புரிந்து கொண்டார். இப்படித் தான் இன்றைக்குப் பலபேர் சொந்தமில்லாததையெல்லாம் சொந்தம் என்று நினைத்துக்கொண்டு சண்டை போட்டுக் கொண் டிருக்கிறார்கள்.

இராமகிருஷ்ண பரமஹம்சர் ஒரு கதை சொல்லியிருக்கிறார். அது என்ன என்றால் கடவுள் இரண்டு சமயங்களிலே சிரிக்கிறாராம். ஒருசமயம் எப்படியென்றால்... ஒரு வைத்தியர் ஒரு நோயாளியிடம் "பயப்படாதே நான் உன்னைக் காப்பாற்றி விடுகிறேன்" என்று சொல்கிறபோது சிரிப்பாராம். "நாம் இந்த நபருடைய வாழ்க்கையை முடிக்கத் திட்டம் போடுகிறோம். இவன் அவனைக் காப்பாற்ற நினைக்கிறானே" என்று நினைத்துச் சிரிப்பாராம்.

கடவுளுக்குச் சிரிப்பு வருகிற இன்னொரு சந்தர்ப்பம் என்னவென்றால், அண்ணனும் தம்பியும் அப்பா விட்டுச்சென்ற நிலத்தை இரண்டாகப் பிரித்து நடுவில கோடு போட்டு கோட்டுக்கு இந்தப் பக்கம் என்னுடையது. அந்தப் பக்கம் உன்னுடையது என்று சொல்லிக் கொண்டிருக்கிறபோது கடவுளுக்கு சிரிப்பு வருமாம். "இந்த இடம் முழுவதும் என்னுடையது. அப்படி இருக்கிறபோது இந்த இரண்டு பேரும் என்னுடையது உன்னுடையது" என்று உரிமை கொண்டாடுகிறார்களே! என்று நினைத்துச் சிரிப்பாராம்.

யோசித்துப் பார்த்தால் நியாயமாகத்தான் தெரிகிறது. இருக்கிறதையெல்லாம் சொந்தமாக்கிக்கொண்டு அதை பாதுகாக்கிறது எப்படிஎன்பதிலேயே நம் காலம் எல்லாம் கழிந்து விடுகிறது.

நம் ஆசாமி ஒருத்தன் ஊரிலே பெரிதாக ஒரு வீடு கட்டினான். ஒருநாள் அவன் நகருக்கு வந்தான். திடீரென்று புயல், மழை, வெள்ளம் என்று ஊரிலேயிருந்து தகவல் வந்தது.

"உன்னுடைய வீடு வெள்ளத்திலே அடித்துக்கொண்டு போய்விட்டது" என்றான்.

இவன் கவலைப்படவேயில்லை. "இருக்கவே இருக்காது. என்னுடைய வீட்டுக்கு எந்த ஆபத்தும் வராது, வந்திருக்காது" என்றான். "எப்படியடா அவ்வளவு உறுதியாகச் சொல்கிறாய்" என்று கேட்டான். "வரும்போது அதை பத்திரமா பூட்டிட்டுத்தான் வந்திருக்கிறேன். சாவிகூட இதோ என் சேட் பொக்கற்றிலே தான் இருக்கு" என்றான்.

துன்பம் வந்தபோதும்கூட என் மீது நம்பிக்கை குறைவுபடாமல் இருந்தால் அவர்களுக்கு என் உதவி கண்டிப்பாக கிடைக்கும். *– சீரடி சாய்பாபா*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இல்லானே; உள்ளானே தனியனேனை காத்தருள்!

திருவாசகத்தின் பெருமை பற்றி தவத்திரு தனிநாயகம் அடிகளார் ஆற்றிய உரையை இன்றும் பலர் நினைவுபடுத்துவர்.

அந்தளவுக்கு அடிகளார் திருவாசகம் எனும் தேனைப் பருகிப் பேரின்பம் கண்டவர்.

திருவாசகத்தின் ஆழ்ந்தகன்ற தத்துவத்தை உய்த்துணர்ந்த ஜி.யு.போப் அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

இவை திருவாசகத்தின் பெருமையைக் கூறுவதற்கான சில வரிகள்.

திருவாசகம் தந்த மணிவாசகர் சிவபுராணம் என்ற சிந்தனைக் கருவூலத்தை நமக்குத் தந்து, அவன் அருள் பற்றி அறிய உதவினார்.

சிவபுராணத்தில் சிவனின் இயல்பைக் கூறுகையில், இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே என்று கூறுவார்.

இன்ப துன்பம் அற்றவன் பற்றற்றவனாவான்.

ஆக, பற்றற்ற பரம்பொருளை நாமும் பற்றுதல் வேண்டும். ஏனெனில் நாம் பற்று விடுவதற்கு

மணிவாசகனின் கருத்தை வள்ளுவனின் *பற்றுக பற்றற்றான் பற்றினை...* என்ற குறள் நமக்கு உணர்த்தி நிற்கிறது.

இங்கு மணிவாசகர் கூறிய இல்லானே உள்ளானே என்ற சொற்பதத்தை நோக்கும் போது, கொரோனாத் தொற்றுடன் அந்தச் சொற்பதம் சாலப் பொருந்துகிறது.

அதாவது தனிமைப்படுத்தல் என்ற பெயரில் கொரோனா தொற்று இல்லாதவர்களும் கொரோனாத் தொற்று உள்ளவர்களுடன் சேர்த்து தங்க வைக்கப்படுகின்றனர்.

இதனால் இல்லாதவன் அதாவது கொரோனாத் தொற்று இல்லாதவன் கொரோனாத் தொற்று உள்ளவனுடன் சேர்க்கப்படுகின்ற போது உள்ளவனாகிறான்.

மாறாக கொரோனாத் தொற்று உள்ளவன் தொற்று இல்லாதவனாக ஆகும்போது அவனுடன் சேர்கின்றவன் கொரோனா இல்லாதவனாகிறான்.

ஆக, உள்ளவனுடன் இல்லாதவன் சேர்க்கப்படுவது பற்றி நம் மருத்துவ சமூகம் கவனம் செலுத்த வேண்டும்.

ஏனெனில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக செய்யப்படுகின்ற ஒரு நடைமுறையே தனிமைப்படுத்தலாகும்.

தனிமைப்படுத்தல் என்பது தனியனாக்குவது.

ஆகையால் இங்கு தனிமைப்படுத்தல் என்பது கூட்டாக வைத்திருப்பதைக் குறிக்கிறது.

இவ்வாறு கூட்டாக வைத்திருப்பதானது இல்லாதவனை உள்ளவனாக்குவது.

இஃது மனித உரிமைக்கு ஏற்புடைய நீதி முறையன்று.

இப்போது எங்கள் நாட்டில் தனிமைப்படுத்தலுக்குள் கொரோனா கண்டபாட்டில் தொற்றுகிறது.

இந்தத் தொற்று தனிமைப்படுத்தல் என்ற பெயரால் தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு ஏற்படுகிறது. இங்கு கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை உயர்வாக இருப்பது உலக நன்மையைப் பெறுவதற்கு உதவுகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

நாம் என்ன செய்ய முடியும். இல்லானே! உள்ளானே! தனியனேனைக் காத்தருள் என்று மன்றாடுவதைத் தவிர.

# சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நாளாந்த நடவடிக்கையில் ஈடுபடுங்கள்

## ஜனாதிபதி வேண்டுகோள்

(கொழும்பு)

ஊரடங்கு தளர்த்தப்பட்ட நிலையில் பொதுமக்கள் அனைவரும் சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றி நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்தார்.

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அனைத்து மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் நேற்று தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் தளத்தில் அவர் வேண்டுகோள் விடுத்தார். (ஜ-8)

# அரசியலமைப்பிற்கு முரணாக நிதி கையாளுகை விளக்கம் கோரும் ஐக்கிய மக்கள் சக்தி

(கொழும்பு)

அரச செலவுகளை மேற்கொள்ளும் அதிகாரத்தை அரசியலமைப்பிற்கு முரணான வகையில் கையளித்தல் மற்றும் கடன்பெறல் சந்தர்ப்பங்கள் தொடர்பில் விளக்கம் கோரி ஐக்கிய மக்கள் சக்தி கணக்காய்வாளர் நாயகத்திற்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது. அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

அரச செலவுகளுக்கான அதிகாரத்தை அரசியலமைபபிற்கு முரணான வகையில் கையளித்தல் மற்றும் கடன்பெறல் சந்தர்ப்பங்கள் தொடர்பில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஜனவரி 2020 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 2020 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு பாராளுமன்றத்தால் தேர்தலை அறிவிப்பது வரையான செலவுகள் மற்றும் யோசனையொன்று ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தின்யோசனையொன்றை செல்லுபடியற்றதாக்கும் அதிகாரம் திறைசேரி செயலாளருக்கு இல்லை. அதேபோன்று செலவுகளுக்குப் பொறுப்பான நியமனப் பரிந்துரையும் அரசியலமைப்பிற்கு முரணானதாகவே இடம்பெற்றுள்ளது.

மேலும் கடந்த ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதியுடன் கடன் பெறுவதற்காகப் பாராளுமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்ட காலப்பகுதி முடிவடைந்திருக்கிறது.

மீண்டும் பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கான திகதியொன்று நிர்ணயிக்கப்படாத நிலையில், அரசியலமைப்பின் 150(3) ஆம் பிரிவை செயற்படுத்த முடியாது. எனவே ஏப்ரல் 30 ஆம் திகதியின் பின்னர் அரச செலவுகளை மேற்கொளவதற்கான உத்தியோகபூர்வ அதிகாரம் இல்லாமல் போயுள்ளது.

கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஏப்ரல் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பாராளுமன்றத்தின் ஊடாக 721 பில்லியன் ரூபா கடன் பெறுவதற்கு அனுமதி பெறப்பட்டு, பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டது.

எனினும் இக்காலப் பகுதியில் அரசாங்கம் 822 பில்லியன் ரூபா கடனைப் பெற்றிருக்கிறது. அதாவது அனுமதியளிக்கப்பட்ட தொகையை விடவும் அதிகளவில் கடன்பெறப்பட்டுள்ளது. இவை தொடர்பிலும் தெளிவுபடுத்தப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-2)

# வெளிநாட்டவர்க்கு சிகிச்சை வழங்குவதை நிறுத்தி இலங்கையரை அழைத்துவர வழி செய்யுங்கள்

## சஜித் வேண்டுகோள்

(கொழும்பு)

சீஷெல்ஸில் இருந்து நோயாளிகளை அழைத்து வந்து சிகிச்சையளிக்கும் செயற்பாட்டைக் காட்டிலும் வெளிநாடுகளில் நிர்க்கதியாகியுள்ள இலங்கையர்கள் தொடர்பாகவும் அரசாங்கம் உரிய கவனத்தை செலுத்தவேண்டும் என முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்தார். கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிகும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தாக்கத்தை அடுத்து மத்திய கிழக்கு மற்றும் பிற நாடுகளில் உள்ள பல இலங்கையர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தங்களை மீண்டும் நாட்டிற்கு அழைத்து வருமாறு அவர்கள் பலமுறை அரசாங்கத்திடம் கேட்டுள்ளனர்.

எனினும் அந்த விடயத்தில் அரசாங்கம் கவனத்தைச் செலுத்துவதாக தெரியவில்லை என்றும் சுட்டிக் காட்டிய அவர், சீஷெல்ஸில் இருந்து நோயாளர்களை இலங்கைக்கு அழைத்து சிகிச்சையளிப்பதற்கே அரசாங்கம் முன்னுரிமை கொடுப்பதாக குற்றம் சாட்டினார்.

மத்திய கிழக்கில் நிர்க்கதியாகியுள்ளவர்கள் இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டிக்கொடுப்பவர்கள் என்பதை அரசாங்கம் நினைவில்கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# யாழ். மாவட்ட அஞ்சல் திணைக்கள செயற்பாடுகள் வழமைக்கு திரும்பின

## யாழ்ப்பாண பிரதம தபாலதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் அஞ்சல் திணைக்களத்தின் செயற்பாடுகள் யாவும் வழமைக்குத் திரும்பியுள்ளதாக யாழ்ப்பாணம் பிரதம தபாலக அதிபர் திருமதி. சாந்தகுமாரி பிரபாகரன் தெரிவித்தார்.

தற்போதைய நிலைமையில் அஞ்சல் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி கொரோனாதொற்று காரணமாக நாடு முடக்கப்பட்ட நிலையில் அஞ்சல் திணைக்களத்தின் சகல சேவைகளும் முடக்கப்பட்டிருந்த நிலையில கடந்த ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி மீண்டும் பழைய நிலைமைக்கு திரும்பியது.

50 வீத ஊழியர்களின் பங்களிப்போடு திணைக்களங்கள்மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்க சேவையானது மட்டுப்படுத்தப்பட்டளவில் முன்னெடுக்கப்பட்டது.

மட்டுப்படுத்தப்பட்ட சேவை கடந்த 8 ஆம் திகதி வரை வழங்கப்பட்டதோடு பொது மக்களுக்கான சேவை இயன்றளவு அஞ்சல் திணைக்களத்தால் வழங்கப்பட்டது.

கடந்த 18 ஆம் திகதியிலிருந்து மட்டுப்படுத்தப்பட்டளவில் வழங்கப்பட்ட சேவை இன்றிலிருந்து வழமைக்குத் திரும்பியுள்ளதாக தெரிவித்த தபாலதிபர் வழமையாக புகையிரதம் மற்றும் பேருந்து மூலம் எமது தபால் பொதிகள் வேறு மாவட்டங்களிலிருந்து யாழ். மாவட்டத்திற்கு எடுத்து வரப்பட்டன. எனினும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக எமது திணைக்களத்தின் வாகனத்தின் மூலம் ஒரு கிழமையில் இரண்டு தடவைகள் தபால் பொதிகள் கொண்டுவரப்பட்டு மக்களுக்கு உரிய முறையில் சேர்ப்பிக்கப்பட்டன.

எனினும் தற்போது அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டதற்கிணங்க நேற்று முதல் அனைத்து சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-5-114)

## ஆன்மீகச் சிந்தனைகள்

## நல்லவரோடு பழகுங்கள்

- புகழை விரும்பாத நல்லவர்களின் பெயரை, கடவுளே மூன்று உலகத்திலும் விள்ம்பரப்படுத்தி விடுவார்.
- வயது தளர்ந்த பெரியவர்கள் படும் துன்பத்தை சிந்தித்துப் பார்த்து உதவ முயல வேண்டும்.
- படிப்பினால் உண்டாகும் அறிவை விட அனுபவத்தால் உண்டாகும் அறிவே மேலானது.
- பணம் சேரச் சேர சாப்பாடு குறையும். பக்தி, ஒழுக்கம், தூக்கம் இவையும் கூட குறைந்து போகும்.
- நாம் இதுவரை முன்னேறாமல் இருக்க, நல்லவர்களோடு பழகாமல் இருப்பதே காரணம்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**மகிழ்ச்சியாக இருப்போருக்கு குடும்ப வாழ்க்கை சுருக்கமானது. சோகமாக இருப்பவர்களுக்கு நீளமானது.** *- கிரீஸ் பொன்மொழி*

# கொரோனா

# படிப்படியாகக் குறைகிறது பலி எண்ணிக்கை

## மீள்கிறது அமெரிக்கா



(நியூயோர்க்)

உலகம் முழுவதும் நேற்று முன்தின நிலவரப்படி 55 இலட்சத்து 87 ஆயிரத்து 129 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வைரஸ் பரவியவர்களில் 28 இலட்சத்து 73 ஆயிரத்து 655 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 53 ஆயிரத்து 167 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

கொரோனா பரவியவர்களில் 23 இலட்சத்து 65 ஆயிரத்து 645 பேர் குணமடைந்துள்ளனர். ஆனாலும், வைரஸ் தாக்குதலுக்கு உலகம் முழுவதும் நேற்று முன்தினம் வரை 3 இலட்சத்து 47 ஆயிரத்து 861 பேர் பலியாகியுள்ளனர்.

சீனாவின் ஹூபேய் மாகாணம் வுஹான் நகரில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் கடந்த சில மாதங்களாக அமெரிக்காவைப் புரட்டிஎடுத்து வந்தது. வைரஸ் பரவியவர்கள், பலி எண்ணிக்கையில் உலகளவில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

இந்நிலையில், 2 மாதங்களுக்கு பின்னர் தற்போது அமெரிக்காவில் கொரோனாவால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை பெருமளவு குறைந்துள்ளது.

தற்போதைய நிலவரப்படி, அந்நாட்டில் 17 இலட்சத்து 6 ஆயிரத்து 226 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், கொரோனா தாக்குதலுக்கு இதுவரை 99 ஆயிரத்து 805 பேர் உயிரிழந்துள்ளனர். குறிப்பாக நேற்று முன்தினம் மட்டும் 505 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 2 மாதங்களுக்கு பின்னர் முதல் முறையாக அங்கு கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த மார்ச் 29 ஆம் திகதி அமெரிக்காவில் கொரோனாவுக்கு 497 பேர் பலியாகினர். அதன் பின்னர் அங்கு தினமும் பலியாவோர் எண்ணிக்கை ஆயிரம் முதல் 2 ஆயிரம் என்கின்ற கணக்கில் இருந்தது.

ஆனால், நேற்று முன்தினம் நிலவரப்படி அமெரிக்காவில் கொரோனாவுக்கு 505 பேரே உயிரிழந்துள்ளனர். இது கடந்த இரண்டு மாதங்களில் பதிவான ஒரு நாள் கணக்கின் மிகக்குறைவான பலி எண்ணிக்கையாகும்.

அமெரிக்காவில் கொரோனா வைரஸின் வீரியம் படிப்படியாக குறைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-5)

## ஏறுமுகமாகும் தொற்றாளர் எண்ணிக்கை ஒரேநாளில் நூற்றுக்கணக்கானோர் பலி

(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது. இதன்படி நேற்று முன்தினம் புதிதாக 6,414 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானோரின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 44 ஆயிரத்து 950 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் நேற்று முன்தினம் மட்டும் 148 பேர் வைரஸ் தொற்றினால் உயிரிழந்துள்ள நிலையில், உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4172 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் 60 ஆயிரத்து 706 பேர் சிகிச்சைகளுக்குப் பின் வீடு திரும்பியுள்ளதுடன், 80 ஆயிரத்து 72 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.


இதேவேளை தமிழகத்தில் நேற்று முன்தினம் புதிதாக 805 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து மொத்த தொற்றாளர்களின் எண்ணிக்கை 17 ஆயிரத்து 82 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 7 பேர் உயிரிழந்த நிலையில், உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 118 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் 407 பேர் சிகிச்சைகளுக்குப் பின் வீடுகளுக்குத் திரும்பியுள்ளதுடன், 8731 பேர் தொடர்ந்தும் சிகிச்சைப் பெற்று வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (2-5)

### சமாதானத்திற்கான சமிக்ஞை

## 2000 தலிபான் கைதிகளை விடுவிக்க ஆப்கான் ஜனாதிபதி முடிவு



(காபூல்)

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப் கானி, 2,000 தலிபான் கைதிகளை விடுவிக்கவுள்ளதாக உறுதியளித்துள்ளார்.

புனித ரம்ழான் மாதத்தின் முடிவைக் குறிக்கும் ஈத் அல் பித்ருக்கு, மூன்று நாட்களுக்கு போர் நிறுத்தம் குறித்த ஆயுதக் குழுவின் ஆச்சரியமான அறிவிப்பை, அரசாங்கம் வரவேற்றதை அடுத்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதுகுறித்து ஜனாதிபதி கானியின் செய்தித் தொடர்பாளர் செடிக் செடிகி தனது டுவிட்டர் பக்கத்தில், 'நல்லெண்ண சைகையின் அடிப்படையில் தலிபான் கைதிகளை விடுவிக்கும் பணியை ஜனாதிபதி அஷ்ரப் கானி தொடங்கினார்.

கைதிகளை விடுவிப்பதற்கான முடிவு சமாதான முன்னெடுப்புகளின் வெற்றியை உறுதி செய்வதற்காக எடுக்கப்பட்டது' என பதிவிட்டுள்ளார்.

இதேவேளை, தலிபான்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை உடனடியாக தொடங்க அரசாங்க தூதுக்குழு தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி கானி கூறியுள்ளார்.

கட்டார் தலைநகர் டோஹாவில் கடந்த பெப்ரவரி மாதம் கையெழுத்திடப்பட்ட அமெரிக்க - தலிபான் அமைதி ஒப்பந்தத்தின் கீழ் கைதி பரிமாற்றம் ஒப்புக்கொள்ளப்பட்டது.


ஆப்கானிய அரசாங்கம் 5,000 தலிபான் கைதிகளை விடுவிக்கும் என்றும் தலிபான்கள் சுமார் 1,000 ஆப்கானிய பாதுகாப்புப் படை வீரர்களை விடுவிப்பார்கள் என்றும் இந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருந்தது.

அரசாங்கத்திற்கும் தலிபானுக்கும் இடையில் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர் கைதிகளின் இடமாற்றம் ஒரு நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கை என்று ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்புக்கு முன்னர், ஏற்கனவே சுமார் 1,000 தலிபான் கைதிகளை விடுவித்திருந்தது. அதே நேரத்தில் ஆப்கானிஸ்தான் பாதுகாப்புப் படைகளில் சுமார் 300 உறுப்பினர்களை தலிபான்கள் விடுவித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-5)

### கொரோனாத் தடுப்பூசி

## முதலாவது மனித பரிசோதனை அவுஸ்திரேலியாவில் ஆரம்பம்



**(கன்பரா)**

**கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசி குறித்த முதலாவது மனிதப் பரிசோதனையை அவுஸ்திரேலியா நேற்று ஆரம்பித்தது.**

**அவுஸ்திரேலியாவின் மெல்போர்னில் நடைபெற்ற குறித்த பரிசோதனையில் 130 பேர் வரையில் பங்கேற்றதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்தன.**

**தடுப்பூசி குறித்த முதலாவது மனிதப் பரிசோதனையில் 18 வயது தொடக்கம் 59 வயது உடையவர்கள் பங்குபற்றியதாக அந்நாட்டு சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.** (2-8)

## சுற்றுலாப்பயணிகளை வரவேற்கும் முகமாக கட்டுப்பாடுகளைத் தளர்த்துகிறது ஸ்பெயின்



(மட்ரிட்)

கொரோனா வைரஸ் தொற்றினால் மிகப்பெரிய அழிவினை சந்தித்துள்ள ஸ்பெயின், சுற்றுலாத் துறையை ஊக்கப்படுத்தும் ஒரு கட்டமாக, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை வரவேற்க தயாராகிக் கொண்டிருக்கிறது.

இதற்கமைய, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் எதிர்வரும் ஜூலை மாதம் முதல் ஸ்பெயினில் விடுமுறைகளுக்கான முன்பதிவினை மேற்கொள்ளலாம் என சுற்றுலா அமைச்சர் ரெய்ஸ் மரோட்டோ தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஜூலை மாதத்தில் ஸ்பெயினுக்கு வருவதற்கு கோடை விடுமுறையைத் திட்டமிடுவது பொருத்தமானது எனவும் ஸ்பெயின் அரசாங்கம் விதித்திருக்கும் வெளிநாட்டு பயணிகளுக்கான இரண்டு வார சுய தனிமைப்படுத்தல் நடவடிக்கை அதற்குள் நிறுத்தப்படலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் உலகின் இரண்டாவது நாடான ஸ்பெயினில், கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக மார்ச் மாதத்தில் அனைத்து சுற்றுலா துறைகளும் முடக்கப்பட்டன.

கடந்த மார்ச் 14 ஆம் திகதி முதல் உலகின் மிகக் கடுமையான வைரஸ் கட்டுப்பாட்டுக்குக் கீழ் வாழ்ந்து வந்த ஸ்பெயினில், தற்போது வைரஸ் தொற்று பாதிப்பு குறைந்துள்ளதால், அரசாங்கம் கட்டுப்பாடுகளை தளர்த்தி வருகிறது.

எனினும், இரண்டாவது அலை நோய்த்தொற்றுகளைத் தடுப்பதற்காக, வெளிநாட்டுப் பயணிகள் 14 நாட்கள் சுய தனிமைப்படுத்தப்படுவார்கள் என ஸ்பெயின் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அதேபோல, ஐரோப்பாவில் மிக மோசமான கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பை எதிர்கொண்ட 47 மில்லியன் மக்கள் தொகை கொண்ட ஸ்பெயினில், சமூக விலகல் விதிகள் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது. ஸ்பெயினுக்கு ஒரு வருடத்திற்கு சுற்றுலாவுக்காக 80 மில்லியன் மக்கள் வருகை தருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (2-5)

# சமூக தொற்றாளர்கள் குறைந்தளவில் காணப்பட்டமையே நாடு பெற்ற வெற்றி

## ஜனாதிபதி செயலணி தெரிவிப்பு

(கொழும்பு)

ஏப்ரல் 30 ஆம் திகதி தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் சமூகத்திலிருந்து கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்படாமை, நாடு பெற்ற வெற்றி என கோவிட்-19 ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி செயலணி இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளது.

நாடு வழமைக்கு திரும்புவதன் காரணத்தினால், எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக விமான நிலையங்களை திறப்பது குறித்து கோவிட்-19 ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணி ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

சுற்றுலாப் பயணிகளுக்காக நாட்டை திறப்பது தொடர்பில் சர்வதேச மற்றும் உள்நாட்டு சுகாதார துறையினரின் ஆலோசனைகளைப் பெறுவது அவசியம் என ஜனாதிபதி இதன்போது கூறியுள்ளார். (ம-3)

## பொதுத் தேர்தலுக்கான திகதி தீர்மானிக்...

குறித்து கவனம் செலுத்தலாம் என தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானம் எடுத்துள்ளது.

அத்துடன், சுகாதார பணிப்பாளர் தலைமையிலான சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக் கோவையின் விடயங்களை நடைமுறைப்படுத்த தேர்தல்கள் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் இடையில் நேற்று கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இக் கலந்துரையாடலில் தேர்தலை நடத்துவதாயின் முன்னெடுக்க வேண்டிய சுகாதார நடைமுறைகள் என்னவென்பது குறித்து சுகாதாரப் பணிப்பாளர் ஜனாதிபதி செயலாளரிடம் முன் வைத்த ஆலோசனை கோவையை பற்றிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தல் நடாத்தப்பட முன்னர் பொதுமக்கள் சகலரும் பின்பற்றக்கூடிய சுகாதார நடவடிக்கைகள் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

அதேபோல் தேர்தல் வாக்குச் சாவடியில் வாக்களிக்க வரும் பொதுமக்கள் பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற காரணிகளை ஆணைக்குழு ஆராய்ந்துள்ளது.

எனினும் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்க அனுமதி வழங்குவது, விருப்பு இலக்கம் வழங்குவது என்பது குறித்து தீர்மானம் எடுக்க முன்னர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள தேர்தல் விவகாரம் குறித்த வழக்கில் தீர்ப்பு ஒன்று வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

எனவே நீதிமன்றம் தீர்ப்பு ஒன்றினை வழங்க முன்னர் தேர்தல் திகதி குறித்தோ அல்லது தேர்தல் பிரசாரங்களை முன்னெடுப்பது குறித்தோ எந்தவித தீர்மானமும் எடுக்க முடியாது என தேர்தல்கள் ஆணைக்குழு இடையிலான கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கோவிட்-19 வைரஸ் தொற்றுநோய் காரணமாக பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரணம் கொடுக்கும் செயற்பாடுகளில் பல தேர்தல் குற்றங்கள் இடம்பெறுவதாக தேர்தல்கள் ஆணைக் குழுவிக்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் குறித்தும் நேற்றைய கூட்டத்தில் ஆணைக்குழு உறுப்பினர்கள் கவனம் செலுத்தியுள்ளனர். (ம-3)

## அமைச்சர்...

தலங்கம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார்.

1964ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதி பிறந்த சௌமியமூர்த்தி ஆறுமுகன் ராமநாதன் தொண்டமான் தந்தை வழியில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவராகப் பதவி வகித்தார். கடந்த பல அரசுகளில் அமைச்சராக பதவி வகித்தவர்.

கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவையில் ஆறுமுகம் தொண்டமான் தோட்ட உட்கட்டமைப்பு, சமூக வலுவூட்டல் அமைச்சராக காலமாகும் வரை இருந்தார்.

ஆறுமுகன் தொண்டமான் 1990ஆம் ஆண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

1993ஆம் ஆண்டு கட்சியின் நிதிச் செயலாளராகவும், 1994ஆம் ஆண்டு பொதுச் செயலாளராகவும் பதவியேற்றார்.

முதற்தடவையாக 1994 பாராளுமன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டு 74,000 வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்றார்.

அதன் பின்னர் 2000, 2004, 2010 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் தொடர்ச்சியாக வெற்றி பெற்றார். (ம-3)

## சி.ஐ.டி பணிப்பாளராக கோட்டா...

மூத்த பொலிஸ் அத்தியட்சகர் அடம்பரகே றுவான் பிரசன்ன ஜெயக் டி அல்விஸ் ஜனாபதி கோட்டாபய ராஜபக்ஷவால் கடந்த வெள்ளிக்கிழமை குற்றவியல் விசாரணைப் பிரிவின் (சி.ஐ.டி) புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில், ஜஸ்மின் சூக்கா விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக 2019ஆம் ஆண்டு 11 தமிழர்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு உட்பட சித்திரவதை தொடர்பான பல நீதிமன்ற ஆவணங்களிலும் பிரசன்ன டி அல்விஸின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் அல்விஸ் உட்பட வேறுபல அதிகாரிகளின் விபரங்களைக் கொண்ட 13 பக்க ஆவணக்கோவை ஒன்று சாட்சியமாக சமர்ப்பிக்கப்பட்டது.

பாராளுமன்றத் தேர்தல் வரும் நிலையில் பெரும் கவலையை ஏற்படுத்தும் நடவடிக்கையாக இது உள்ளது என ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

1998ஆம் ஆண்டு காலப் பகுதியில் இருந்து தடுத்து வைக்கப்பட்ட பலரும் பிரசன்ன டி அல்விஸ் தம்மை சித்திரவதை செய்ததாக அல்லது அதில் தொடர்புபட்டிருந்ததாக அவரது பெயரைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

பிரசன்ன டி அல்விஸ் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மிகவும் விசுவாசமானவராக இருந்துள்ளார். போர் இடம்பெற்ற காலப் பகுதியில் அல்விஸ் பயங்கரவாத விசாரணைப் பிரிவில் இருந்ததுடன் அவருக்கான கட்டளைகளை கோட்டாபய ராஜபக்ஷவே நேரடியாக வழங்கினார் என்றும் ஜஸ்மின் சூக்கா தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## ஒரேநாளில்...

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை ஆயிரத்து 319ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

நேற்று மட்டும் 137 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் முன்னதாக அடையாளம் காணப்பட்ட 96 பேரில் 88 பேர் குவைத் நாட்டிலிருந்து கடந்த வாரம் நாடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தவர்கள்.

8 பேர் கடற்படைச் சிப்பாய்கள் என்று சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதுவரை 712 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

595 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-3)

## அரசியலமைப்புச்சட்டப்படி ஜனாதிபதி...

என சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் நேற்று தெரிவித்துள்ளார்.

கலைக்கப்பட்ட மாகாணசபையை மீண்டும் கூட்டும் அதிகாரம் மாத்திரமே ஜனாதிபதிக்கு அரசியலமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது என சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் இந்திக தெமுனி டி சில்வா உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இதனால், மனுதாரர்கள் கோரும் நிவாரணத்தை வழங்க முடியாது என்பதால், மனுக்களை விசாரிக்காது அவற்றை தள்ளுபடி செய்யுமாறும் சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் குறிப்பிட்டுள்ளார்.

ஜூன் 20ஆம் திகதி பொதுத் தேர்தலை நடாத்துவது மற்றும் பாராளுமன்றத்தைக் கலைத்து ஜனாதிபதி வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் ஆகியவற்றை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நேற்று 6ஆவது நாளாகவும் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவனேக அலுவிகார, சிசிர டி ஆப்ரூ, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட ஆகிய ஐந்து நீதியரசர்கள் குழாம் இந்த மனுக்களை விசாரித்து வருகிறது.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் மேலும் வாதங்களை முன்வைத்துள்ளதுடன் பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான சட்டத்திற்கு அமைய அரச விடுமுறை தினங்களில் வேட்பு மனுக்களை பெற்றுக் கொள்வதில் சட்ட ரீதியான தடைகள் இல்லை என்பதை வழக்குத் தீர்ப்புகளை மேற்கோள்காட்டி வாதாடினார்.

மனுதாரர்கள் கோரியுள்ளது போல் பொதுத்தேர்தலுக்காக வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டமை சட்டவிரோதமானது என தீர்ப்பளித்தால், புதிதாக வேட்பு மனுக்களை கோர சட்டத்தில் இடமில்லை எனவும் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## வைரஸ் பர...

கள் மற்றும் நோயாளர்களின் எண்ணிக்கை குறைந்து வந்தாலும் உலகம் முழுவதும் உள்ள நாடுகள் அவதானத்துடன் இருக்க வேண்டும்.

எந்த நேரத்திலும் வைரஸ் பரவுவது அதிகரிக்கலாம் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். வைரஸ் பரவுவது குறைந்து வருவது போல் தெரிந்தாலும் அது தொடர்ந்தும் குறையும் என எண்ண முடியாது.

இரண்டாவது அலை ஏற்பட பல மாதங்களும் செல்லலாம். இது முதலாவது அலை என்றாலும் உச்சமான இரண்டாவது சந்தர்ப்பம் ஏற்படக் கூடும் எனவும் மைக் ராயன் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## பொதுத் தேர்...

குறித்த மனுக்கள் மீதான விசாரணை நேற்று உயர் நீதிமன்றத்தில் ஆறாவது நாளாக வும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## பாடசாலை ஆரம்...

மட்டத்தில் கடந்த 26 நாட்களாக அடையாளம் காணப்படாத நிலையில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு இயல்நிலை படிப்படியாக ஏற்படுத்தப்படும் நிலையில் பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் சுகாதார அமைச்சின் அதிகாரிகளுக்கும் கல்வி அமைச்சுக்கும் இடையே சிறப்புக் கலந்துரையாடல் நேற்று கல்வி அமைச்சில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பையடுத்து பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் கல்வி அமைச்சர் ஊடகங்களிடம் கருத்துரைத்தார்.

இன்னும் இரண்டு வாரங்களுக்குப் பின்னரே பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து தீர்மானிக்கப்படும்.

மாணவர்களை பொது போக்குவரத்து சேவைகளின் ஊடாக எவ்வாறு பாதுகாப்பான முறையில் பாடசாலைகளுக்கு அழைத்துச் செல்வது குறித்து போக்குவரத்து அமைச்சருடன் கலந்துரையாடப்படவுள்ளது.

எனவே பாடசாலை மாணவர்களின் பொதுப் போக்குவரத்து சேவையில் உள்ள சிக்கல்கள் விரைவில் தீர்க்கப்படும் என்று எதிர்பார்ப்பதாக கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார். (ம-3)

## டெங்கு நோயா...

எண்ணிக்கை 485 ஆக பதிவாகியுள்ளது.

மே முதல் வாரத்தில் 96 ஆக இருந்த நோயாளிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில், கடந்த இரண்டு வாரங்களில் இந்த எண்ணிக்கை ஐந்து மடங்கு அதிகரித்துள்ளது.

அந்தவகையில், கடந்த மூன்று வாரங்களாக கண்டியில் (86), இரத்தினபுரியில் (84), மட்டக்களப்பில் (50), யாழ்ப்பாணத்தில் (45), கொழும்பில் (40), மற்றும் கேகாலையில் (40) என குறித்த பகுதிகளில் இருந்து அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

தென்மேற்கு பருவமழை வீழ்ச்சி ஆரம்பமாகவுள்ள நிலையில் எதிர்வரும் ஜூன் மாதம் முதல் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு கணித்துள்ளது. (ம-3)


கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 26-05-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2434
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 46 48 62 65
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 929
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.05.26
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 59,117,065/-
வெற்றி இலக்கங்கள் 02 43 45 55
ஆங்கில எழுத்து D
வர்த்தக சந்தையில் தொற்று நோய் தொடர்பான பிரச்சனை காரணமாக 2020.03.31 என அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுக்கள் இந்த சீட்டிழுப்பில் செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம் உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 2815
வர்ணம் சிவப்பு
திகதி 26.05.2020
வர்த்தக சந்தையில் தொற்று நோய் தொடர்பான பிரச்சனை காரணமாக 31.03.2020 என அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுக்கள் இந்த சீட்டிழுப்பில் செல்லுபடியாகும்.
வெற்றி இலக்கங்கள் 14 25 51 62 விருச்சிகம்
பம்பர் சான்ஸ் விசேட இல.
ரூ.500 பரிசுக்குரிய 4421
ரூ.100 பரிசுக்குரிய 424
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அராலிப் பகுதியில் வீட்டில்

# தனிமைப்படுத்தலில் இருந்தவர் திடீரென மயங்கி விழுந்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அராலிப் பகுதியிலுள்ள வீட்டில் தனிமைப்படுத்தலில் இருந்த ஒருவர் திடீரென மயங்கி விழுந்ததால் சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர், கண்டியிலிருந்து உரிய அனுமதி பெற்று யாழ்ப்பாணம் அராலிக்கு சென்றுள்ளார்.

முறையாக பொதுச்சுகாதார பரிசோதகரின் அறிவுறுத்தலுக்கு அமைய 14 நாட்கள் அவர் தனிமைப்படுத்தலில் இருந்து வந்த நிலையிலேயே நேற்று அவர் திடீரென மயங்கி விழுந்துள்ளார்.

இந்நிலையில், அவருக்குகொரோனா வைரஸ் தொற்று இருக்கும் என்ற சந்தேகத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3)


விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
0768226240



வேலையாட்கள் தேவை
பதிவு செய்யப்பட்ட மருந்தாளர் உடனடியாகத் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொழில் சார்ந்த நபர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
குறிப்பு:- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (C-9614)
076 635 6560 / 075 055 6560


## மரண அறிவித்தல்



### யோண்பிள்ளை பிரான்சிஸ் கெனடி (கொலின்ஸ்)

சக்கோட்டை, அல்வாய் வட மத்தி, வடமராட்சியைப் பிறப்பிடமாகவும் கனடா, றொறன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட யோண்பிள்ளை பிரான்சிஸ் கெனடி நேற்று (26.05.2020) செவ்வாய்க்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் யோண்பிள்ளை - மேரி றீற்றா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும் கமலம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் றோகினியின் பாசமிகு கணவரும் லொசிங்ரன், ஜோதினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் லிலிமலர் (குமுதா), றொபின்சன், றீகன், மில்ரன் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சக்கோட்டை,
அல்வாய் வட மத்தி. (2891)

தகவல்:-
குடும்பத்தினர்


மீண்டும்
வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும்
100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536


# காட்டு யானை தாக்கி முதியவர் படுகாயம்

## மாங்குளத்தில் சம்பவம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாங்குளம் பிரதான வீதியில் காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்து வருகின்ற நிலையில் நேற்று இரவு ஏழு மணி அளவில் காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகிய வயோதிபர் தற்போது மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஒட்டுசுட்டான் வித்தியாபுரம் பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய நாகலிங்கம் முத்துலிங்கம் என்பவர் மிதிவண்டியில் சென்றுகொண்டிருந்த வேளை, ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியில் 14ஆம் கட்டை பகுதியில் மாலை 7.00 மணியளவில் காட்டு யானை தாக்கியதில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் ஏற்கெனவே விபத்தில் காயமடைந்து முறிந்த நிலையில் இருந்த காலில் யானை தாக்கியதால் படுகாயமடைந்து மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். யானையின் தாக்குதலால் துவிச்சக்கரவண்டியும் சேதமாகியுள்ளது.

யானை தாக்கியதை தொடர்ந்து, அவர் எழுப்பிய அவலக்குரலில் அயல் கிராமத்தவர்கள் வருகை தந்து உடனடியாக 1990க்கு அழைப்பை ஏற்படுத்தி அவசர நோயாளர் காவு வண்டி மூலம் மாங்குளம் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (ம-3,281)

# யாழில் ஊரடங்கை மீறிய 80 பேருக்கு எதிராக வழக்கு

## 21 பேரிடம் 2 ஆயிரம் ரூபாய் தண்டம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றத்துக்காக 21 பேருக்கு 2 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்து யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் ஏ.பீற்றர் போல் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள காலப்பகுதியில் வீதியில் பயணித்த 80 பேரின் வழக்குகள் நேற்று நீதவான் நீதிமன்றில் அழைக்கப்பட்டன. அவர்களில் 21 பேர் மட்டுமே மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

பொதுமக்களின் பாதுகாப்புக்காக அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டத்தை மீறி அத்தியாவசிய தேவைகள் ஏதுமின்றி வேண்டுமென்று பிரதேசத்தினுள் நடமாடித் திரிந்தமையால் 1947ஆம் ஆண்டு 25ஆம் இலக்க பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் மூன்றாம் பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கும் மற்றும் 1959ஆம் ஆண்டு 08ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 16 (3) உப பிரிவின் கீழ் தண்டனைக்குரிய குற்றத்தை புரிந்துள்ளீர் என்று சந்தேகநபர்களுக்கு குற்றப் பத்திரிகை வாசித்துக் காண்பிக்கப்பட்டது.

சந்தேக நபர்கள் 21 பேரும் தம்மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டார்.

அதனால் அவர்களை குற்றவாளிகளாக இனங்கண்ட மன்று, 2 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்து உத்தரவிட்டது.

ஏனைய 59 பேரின் வழக்குகளும் ஒத்திவைக்கப்பட்டு திகதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அன்றைய மன்றில் முன்னிலையாகுமாறு அவர்களுக்கு அழைப்புக் கட்டளை வழங்க நீதிவான் உத்தரவிட்டார். (ம-3)


மாணவர் அறிவுத் திறனை மேம்படுத்தும் சுய பயிற்சிக் கையேடுகள்
தரம் 1 முதல் தரம் 11 வரை
அலகு ரீதியான வினாக்கள் விடைகளுடன்
ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை வெளிவரும்
யாழ். அக்கடமி வெளியீடு
(தமிழ் மொழி மூலம் / English Medium)
பிரபல புத்தகசாலைகளில் வாராந்தம் பெற்றுக் கொள்ளலாம்
(யாழ்.நகர், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம்) (C-9628)
தொடர்பு:- 077 538 8471, 021 222 9016



A/L இரசாயனவியல் (தமிழில்)
Zoom வகுப்புகள்
'க.சிவத்திரன்' B.Sc (Hons)
ஆரம்பம் - 01.06.2020, Mon
Day, 2020 Batch ⇨ Daily 4.30 am - 6.00 am
2011 to 2019 வரையான ஆண்டுரீதியானது
2022 Batch ⇨ Sat, Mon, Tue, Thur 6.30 am - 8 am
Unit 2 (இரசாயனப் பிணைப்புகள்)
2021 Batch ⇨ Sat, Mon, Tue, Thur 8.30 am - 10.00 am
d - Block, பண்பறிபகுப்பு
இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் என்னிடம் படித்த, படிக்காத எவரும் பங்குபற்றலாம். 0770086416 எனும் இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி இணைவது சம்பந்தமான அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ளவும். Group அமைக்கும்போது ஒருவரின் T.P இலக்கம் மற்றவருக்கு தெரியாதிருக்க யாவரும் Telegram app ஐ download செய்திருத்தல் வேண்டும்.
நீங்கள் விரும்பிய பெயரில் இணையலாம். எனினும் அப்பெயரை தொடர்ந்து மாறாது பேணுதல் வேண்டும். 30.05.2020 Sat இற்கு முன் இணைதல் வேண்டும் (2886)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.05.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# வடக்கு மாகாண கல்வி அமைச்சும் வலம்புரியும் இணைந்து வழங்கும் கல்விச் சேவை
# தரம்-5 புலமைப்பரிசில் வினாத்தாள்


நேரம்: ஒரு மணித்தியாலம் — வினாப்பத்திரம் - 01

❖எல்லா வினாக்களுக்கும் சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

❖மிகவும் நெருங்கிய தொடர்புள்ள உருச்சோடிக்குரிய அடைப்பைத் தெரிவு செய்க:


**01. நேர்கோட்டினால் மாத்திரம் உருவாக்கப்படும் உரு எது?**



1)



2)


3)

**02. வித்தியாசமான உருவைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

1)


2)


3)


03. ஒரே இனங்களை கொண்ட சொற்கூட்டத்தை தெரிவு செய்க.


| 1) கணிதம் | 2) மாம்பழம் | 3) அம்மா |
|---|---|---|
| சமயம் | வாழைப்பழம் | அப்பா |
| பாடம் | பழங்கள் | அக்கா |


04. தரப்பட்ட சொற்களில் இருந்து ஏதாவது ஒரு எழுத்தைப் பாவித்து மிருகம் ஒன்றின் பெயரை எழுதலாம். அப் பெயரைத் தெரிவு செய்க.


தங்கம்
பசி
மாங்கை
அம்மா


1) மாதம் 2) சிங்கம் 3) கங்கை

05. அடுத்து வரும் கோலங்களை இனம்காண்க.



..............................

1)


2)


3)


06. அடுத்து வரும் உருவை தெரிவுசெய்க.



1)


2)


3)


07. 5 என்ற இலக்கத்தை இருமுறை பயன்படுத்தி விடையாக ஒன்று வரும் கணிதச்செய்கை.

1) X 2) ÷ 3) - 4) *

08. 10 X 5 = ▭

தரப்பட்ட கணிதச் செய்கையின் போது வரும் விடைக்கு சமனானது.

1) 50 X 1 2) 25 X 1 3) 50 X 2

**09. இரவில் சூரியன் பிரகாசமாயிருந்தது. இக்கூற்று பற்றி உமது கருத்து யாது?**

**1) இரவில் சூரியன் தெரிவதில்லை.**
**2) நட்சத்திரங்களின் ஒளியை விட பிரகாசம் குறைவாகும்.**
**3) சூரியனின் ஒளியை விட சந்திரனின் ஒளி பிரகாசம்.**

**10. ஆனைக்கும் அடிசறுக்கும் என்ற பழமொழிக்கு ஏற்ற சரியான கருத்தை இனம்காண்க.**

**1) பெரியவரும் சிலவேளையில் தவறு இழைப்பர்.**
**2) பெரியவர் எப்பொழுதும் தவறு இழைக்கமாட்டார்கள்.**
**3) ஆனையும் ஒரு பலமுள்ள மிருகம்**

11. மாணவன் ஒருவன் தனது இடது கையின் 5 விரல்களுக்கிடையில் ஒவ்வொரு பேனையை வைத்திருந்தான். அவனிடம் உள்ள பேனைகளின் எண்ணிக்கை யாது?

1) 5 2) 6 3) 4

12. 10 க்குள் ஒரு எண்ணை நினைத்து அதை 2 ஆல் பெருக்கிய போது விடை 2 வந்ததெனின் நினைத்த எண் யாது?

1) 2 2) 4 3) 1

13. தை மாதத்தில் உள்ள நாட்களின் எண்ணிக்கை அந்த வருடத்தின் மார்கழி மாதத்தின் நடுநாளுடன் கூட்டும் போது கிடைக்கும் நாட்களின் எண்ணிக்கை யாது?

1) 46 2) 47 3) 49

**14. ஒரு மாதத்தின் திங்கட்கிழமை 7ம் திகதி எனின் அம் மாதத்தின் அடுத்த திங்கட்கிழமை என்ன திகதி?**

**1) 15 2) 14 3) 16**


15. ஒரு குடும்பத்தில் மூன்று பிள்ளைகள் மூத்த இருவரும் இரட்டைப் பிள்ளைகளாவர். கடைசிப் பிள்ளையின் வயது 4 எனின் மூவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகையாக இருக்கக்கூடியது?

1) 21 2) 19 3) 24

16. ஒரு வகுப்பில் 10 மாணவர்கள் உள்ளனர். எல்லோரும் ஆசிரியர் வரும்போது காலை வணக்கம் கூறினார்கள். ஆசிரியரும் ஒரே தடவையில் எல்லோருக்கும் காலை வணக்கம் கூறினார். வகுப்பில் இடம்பெற்ற காலை வணக்கங்களின் எண்ணிக்கை.

1) 11 2) 20 3) 46

17. ஒரு மாணவன் 1m நாடாவை இரண்டாக மடித்து அதனை வெட்டிய முறையை படம் காட்டுகிறது.




அவனுக்கு கிடைத்த துண்டுகளின் எண்ணிக்கை.

1) 2 2) 4 3) 3

18. பின்வரும் எண்கோலங்களை அவதானித்து அடுத்துவரும் எண்களை இனம்கண்டு அதன்கீழ்க் கோடிடுக.


1 , 3 , 5 , .......................

1) 2 2) 9 3) 7

19. 4 , 9 , 14, ......................

1) 15 2) 19 3) 18


20




வெற்றுக்கூட்டிற்குள் வரவேண்டிய எண்ணை இனம் காண்க.

1) 6 3) 3 3) 5

21.




1) 6 2) 4 3) 5

22. பருமன் அடிப்படையில் ஏறுவரிசைப்படுத்தியுள்ள கூட்டம் யாது?

1) யானை, முயல் , மான் , எலி

2) எலி, முயல், மான், சிங்கம்

3) யானை, மான், முயல், எலி

23. ஒரு நிரையில் 5ஆம் தர மாணவர்கள் நிற்கின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ஆங்கில எழுத்தை ஆரம்பத்திலிருந்து ஒழுங்காக கூறினார்கள். கடைசி மாணவன் "m" என்ற எழுத்தை கூறினான். எனின் வகுப்பில் உள்ள மாணவர்கள் எண்ணிக்கை யாது?

1) 13 2) 12 3) 14

24. ஒரு மரக்கிளையில் சில கிளிகள் உள்ளன. கிளிகளின் கால்களின் எண்ணிக்கையும் சொண்டுகளின் எண்ணிக்கையினதும் கூட்டுத் தொகை 9 எனின் கிளிகளின் எண்ணிக்கை யாது?

1) 4 2) 3 3) 2


25. பாதை ஒன்றில் ரமணன் வடக்கு நோக்கி சென்று அவனது இடது கைப்பக்கம் திரும்பி 20m சென்று அவனது இருப்பிடத்தை அடைந்தான். அவன் சென்ற மொத்த தூரம் 35m எனின், அவன் சென்ற பாதையை சரியாக காட்டும் படத்தை இனம்காண்க.




26.



இவ்வுருவை ஆக்கத் தேவையான உருத்தொகுதிகள்.




27. சிவா, மதன், ரூபன் ஆகிய மாணவர்கள் கணித பாடத்தில் பெற்ற புள்ளிகள் முறையே 90,92,89 ஆகும். சிவா முதல் நிலையை அடைய மதனை விட எத்தனை புள்ளிகள் கூடுதலாக எடுக்க வேண்டும்.


1) 3 புள்ளிகள் 2) 2 புள்ளிகள் 3) 1 புள்ளி

28. 5 x ☐ = 10 + 10 எனின்,

☐ வரவேண்டிய எண் யாது?

1) 2 2) 3 3) 4

29. பின்வரும் வடிவங்கள் இவ்வாறு தரப்பட்டன.




தரப்பட்ட தரவுகளுக்கு அமைய △ இன் பெறுமதி யாது?

1) 15 2) 20 3) 10

30. எனது தாயாரிற்கு இரண்டு பிள்ளைகள் எனின் எனது சகோதரர் எண்ணிக்கை?

1) 2 2) 3 3) 1

31. குமாரை விட ராஜா உயர்ந்தவன். ஆனால் கவியை விட கட்டையானவன்.இவர்களில் உயரமானவன் யார்?

1) கவி 2) குமார் 3) ராஜா


32. ஒரு பனைமரத்தில் இருந்து 4 பனம்பழங்கள் விழுந்தன. ஒவ்வொரு பழத்திலும் 3 விதைகள் உள்ளன எனின் பழங்களில் இருந்து எத்தனை விதைகள் கிடைத்தன.

1) 15 2) 12 3) 14

33. அம்மா என்ற சொல்லை X Y Z என்ற ஆங்கில எழுத்துக்களால் குறித்துக்காட்டினால் மாமா என்ற சொல்லை குறித்துக்காட்டுவது.

1) XY 2) ZY 3) ZZ

34.



இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை.

1) 7 2) 4 3) 6

35. 2019ஆம் ஆண்டில் உள்ள மாதங்களில் 28 நாட்களை மட்டும் கொண்ட மாதங்களின் எண்ணிக்கை.

1) 12 2) 11 3) 1

36. பௌர்ணமி நிலவினை பார்த்து தரம் 5 மாணவர்கள் கூறக்கூடிய வடிவம் யாதாகும்?

1) வட்டம் 2) நீள்வட்டம் 3) சதுரம்

37. சமச்சீரான எழுத்துக்களை கொண்ட தொகுதி அல்லாதது?

1) M O L 2) W H I 3) V O Y

38. தவணைப் பரீட்சைகளில் கண்ணன் ஆரம்பத்தில் இருந்து 7 முறை 1ம் பிள்ளையாகவும் 8ம் முறை 2ம் பிள்ளையாகவும் வந்தான். அவன் 2ம் பிள்ளையாக வந்த வகுப்பும் தவணைப் பரீட்சையும் யாது?

1) தரம் 2 , 3ம் தவணை

2) தரம் 4 , 1ம் தவணை


3) தரம் 3 , 2ம் தவணை

39. இலங்கை - மாகாணம் எனின்

பாடசாலை - ? கேள்விக்குரிய சரியான விடை யாது?

1) அதிபர் 2) வகுப்பறை 3) மாணவர்

40.



முழு உருவின் பரப்பளவு நிறந்தீட்டப்பட்ட பகுதியின் பரப்பளவைப் போல் எத்தனை மடங்கு.

1) 4 2) 3 3) 6

# வடக்கு மாகாண கல்வி அமைச்சும் வலம்புரியும் இணைந்து வழங்கும் கல்விச் சேவை

# க.பொ.த.சாதாரணதரம்- கர்நாடக சங்கீதம்

நேரம்: ஒரு மணித்தியாலம் வினாப்பத்திரம் - 01

சரியான விடையை தெரிவு செய்து கோடிடுக.

1.இராகங்களின் இலட்சணத்தைக் கூறும் உருப்படிவகை.
1) சஞ்சாரிகீதம் 2) ஸ்வரஜதி
3)இலட்சணகீதம் 4) கீர்த்தனை

2.சங்கீர்ணஜாதி துருவதாளத்தின் அங்க அடையாளம்
1) I4 0 I4I4 2) I7 0I7I7
3) I5 0I5I5 4) I9 0I9I9

3."அங்கமும் வேதமும்" என்ற உருப்படியின் வகை.
1) தேவாரம் 2) திருவிசைப்பா 3) புராணம் 4) திருப்புகழ்

4.ஹிந்துஸ்தானி இசையில் காபி இராகத்திற்கு இணையான கர்நாடக இராகம்
1) சங்கராபரணம் 2) கல்யாணி
3) கரிஹாம்போஜி 4) கரஹரப்பிரியா

5.ஆரோகண-அவரோகணம் இரண்டிலும் க,த ஆகிய ஸ்வரங்கள் வர்ஜமாக வரும் இராகம்
1) ஆரபி 2) மத்தியமாவதி
3) பிலஹரி 4) மோகனம்

6.இராஜ வாத்தியம் எனச் சிறப்புப் பெயர் பெறும் வாத்தியம்
1) நாதஸ்வரம் 2) வீணை 3) மிருதங்கம் 4) தவில்

7.பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்களுள் ஒன்பதாவது ஸ்வரஸ்தானம்
1) சுத்தரிஷபம் 2) சுத்தமத்திமம்
3) சுத்ததைவதம் 4) சதுஸ்ருதிதைவதம்

8.நீஸா,ஸ்ரீஸா; என்ற ஸ்வரக் கோவையின் அட்ஷரங்கள்
1) 14 2) 10 3) 11 4) 12

9.தானவர்ணத்தின் அங்கங்கள்
1) பல்லவி,அனுபல்லவி,முத்தாயிஸ்வரம்,சரணம்,சரணஸ்வரங்கள்
2) பல்லவி,சரணம்
3) பல்லவி,அனுபல்லவி,சரணம்
4) பல்லவி,முத்தாயிஸ்வரம்,சரணம்,சரணஸ்வரங்கள்

10."வாத்யத்ரயம்"என அழைக்கப்படும் வாத்தியங்கள்
1)வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் 2)தம்புரா, வீணை, மிருதங்கம்
3)புல்லாங்குழல், நாதஸ்வரம், தவில் 4)நாதஸ்வரம், தவில், ஒத்து

11. கரிஹாம்போதியின் மேளஎண்
1) 08 2) 65 3) 22 4) 28

12.குறிக்கும் குறியீடு.
1) அன்னியஸ்வரம் 2) கமகம்
3) ஆவர்த்தனமுடிவு 4) அங்குமுடிப்பு

13."குறில்"ஸ்வரத்தின் அட்ஷரகாலம்
1) 2 2) 1 3) 3 4) 4

14. தேவாரத் திருப்பதிகங்கள் திருமுறையாக வகுக்கப்பட்டது
1) மகேந்திரவர்மன் காலத்தில் 2) சரபோஜி மகாராஜாகாலம்
3) இராஜராஜ சோழன் காலம் 4) ரகுநாதநாயக்கமன்னன் காலம்

15. வைணவ ஆழ்வார்களால் இயற்றப்பட்டது
1) திருவெம்பாவை 2) திருச்சாழல்
3) நாலாயிரம் திவ்வியபிரபந்தம் 4) திருப்பொன்னூஞ்சல்

16.பஹு'த்வனிவாத்தியம் என அழைக்கப்படுவது
1) மிருதங்கம் 2)தம்புரா 3)வீணை 4)நாதஸ்வரம்

17. தாளம் தொடங்கமுன் பாடல் ஆரம்பித்தல்
1) சமஎடுப்பு 2) அநாகதஎடுப்பு 3) க்ரஹம் 4) அதீதஎடுப்பு

18. அப்பியாசகானத்தினுள் அடங்காத உருப்படிவகை
1) பதம் 2) அலங்காரம்
3) தாட்டுவரிசை 4) மேல்ஸ்தாயிவரிசை

19. "யாழ்முறிப்"பண்ணுக்குச் சமமான கர்நாடக இராகம்
1) நீலாம்பரி 2) அடாணா 3) ஆரபி 4) காம்போதி

20.எல்லா ஸ்வரங்களும் தீவிர ஸ்வரமாகக் கொண்ட இராகம்
1) தோடி 2) கரிஹாம்போஜி 3) கல்யாணி 4) பந்துவராளி

21. வீணைவாசிப்பதில் தேர்ச்சி பெற்றவர்கள்
1) ஓதுவார் 2) நட்டுவனார் 3) வைணீகர் 4)வைஷியர்

22. அசலஸ்வரங்கள்
1) ஸ,ம 2) ரி,க,ம,த,நி 3) ரி,க 4) ஸ,ப

23. இசையுடன் கூடிய உரையாடல் மூலம் கதையைக்கூறும் நாடகம்
1) நாட்டியநாடகம் 2) இசைநாடகம்
3) இலக்கியநாடகம் 4) இதிகாசநாடகம்

24.உபாங்க இராகம்
1) கமாஸ் 2) பிலஹரி 3) மோகனம் 4) ஆனந்தபைரவி

25. 72 மேளகர்த்தா அமைப்புப்பற்றிக் கூறியமுதல் நூல்
1) சதுர்தண்டிப்பிரகாசிகை 2) சங்கீதசாராம்ருதம்
3) சங்கிரகசூடாமணி 4) சங்கீதசம்பிரதாயபிரதக்ஷினி

26."சின்னஞ்சிறுகிளியே கண்ணம்மா"என்ற இராகமாலிகையின் தாளம்
1) திஸ்ரசாபு 2) கண்டசாபு 3) மிஸ்ரசாபு 4) சங்கீர்ணசாபு

27. "முகரந்திரம்"என்னும் பாகத்தைக் கொண்ட வாத்தியம்
1) தம்புரா 2) நாதஸ்வரம் 3) தவில் 4) புல்லாங்குழல்

28."பண்டு நால்வருக்கு"தேவாரத்தின் பண்
1) இந்தளம் 2) நட்ட இராகம் 3) பழந்தக்க இராகம் 4) புறநீர்மை

29.விவாதி மேளங்களின் எண்ணிக்கை
1) 12 2) 32 3) 36 4) 40

30.மாயாமாளவகௌளை இராகத்திலேயேஅப்பியாசவரிகைளைப் பயில வேண்டும் என்ற சம்பிராயத்தை ஏற்படுத்தியவர்
1) சாம்பமூர்த்தி 2) புரந்தரதாஸர்
3) முத்துத்தாண்டவர் 4) பாபநாசம் சிவன்

31. "சங்கீர்ணசாபு"தாளத்திற்குரிய சொற்கட்டு
1) தகிட 2) தததகிட
3) தகிடதகதிமி 4) தகதிமிதகதகிட

32. விலோமசிட்டை ஸ்வரத்தைக் கொண்டுள்ள உருப்படி
1) அடதாளவர்ணம் 2) இராகமாலிகை வர்ணம்
3) கீர்த்தனை 4) இராகமாலிகை

33. பிரஹ்மசக்கரத்தில் வரும் இராகங்களின் மேளஎண்
1) 49-54 2) 50-55 3) 55-60 4) 61-66

34. பந்துவராளி இராகத்தின் மேளசங்கேதம்
1) நேத்ர -ஸ்ரீ 2) வேத-பூ 3) ருத்ர-மா 4) பிரஹ்ம-கோ

35. திருத்தாண்டகம் பாடுவதற்கேற்ற இராகம்
1) ஆனந்தபைரவி 2) மோகனம்
3) கரிஹாம்போஜி 4) மத்தியமாவதி

36. கோயில்களில் இறைவன் வீதியுலாவரும்போது நாதஸ்வரத்தில் வாசிக்கப்படும் உருப்படி
1) திருவூஞ்சல் 2) மல்லாரி 3) இராகமாலிகை 4) நவக்ரககீர்த்தனை


37. பஜனைப் பத்ததியின் தந்தை
1) ஹரிபாலர் 2) தாளப்பாக்கம் சின்னையா
3) முத்துத்தாண்டவர் 4) அன்னமாச்சாரியார்

38. வாத்திய இசையை இரசிக்கும்போது அவ்வாத்தியத்தினை இனங் காண உதவுவது
1) வாசிக்கும் கலைஞனின் கற்பனைத்திறன்
2) வாசிக்கப்படும் உருப்படி
3) அவற்றின் தனித்துவமான ஒலிப்பண்பு
4) பயன்படுத்தப்படும் நவீன ஒலிபெருக்கிச் சாதனம்

39. முத்துஸ்வாமிதீக்ஷிதர் இயற்றியமுதலாவதுஉருப்படி
1)ஸ்ரீகணபதி 2)கஞ்சதளாயதாக்ஷி
3)ஸ்ரீநாதாதி 4)அக்ஷயலிங்க

40. ஆதிதாளவர்ணத்தை முதலாம் காலத்தில் பாடும்போது அட்ஷரம் ஒன்று எடுத்துக் கொள்ளும் ஸ்வரங்கள்
1)1 2)2 3)4 4)8

வரைபைப் பயன்படுத்திக் கீழ்வரும் 40 - 50 வரையான வினாக்களுக்கு விடைதருக.




41. மேற்குறிப்பிட்டஆரோகண-அவரோகண ஸ்வரஸ்தானவரைபடம் குறிக்கும் இராகம்
1) ஹம்ஸத்வனி 2) பிலஹரி
3) கல்யாணி 4) ஆரபி

42. வரைபடம் குறிக்கும் இராகத்தின் ஆரோகண-அவரோகணம்
1) ஸரிகமபதஸ், ஸ்தபகரிஸ
2) ஸரிகபநிஸ், ஸ்நிபகரிஸ
3) ஸரிகபதஸ், ஸ்நிதபமகரிஸ
4) ஸரிமபதஸ், ஸ்நிதபமகரிஸ

43. வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இராகத்தின் வர்ஜ ஸ்வரங்கள்
1)க,நி 2)க,ப 3)த,நி 4)ம,த

44. வர்ஜ இராகப்பிரிவில் இந்த இராகம் எவ்வகையைச் சேர்ந்தது
1) ஔடவ- ஸம்பூர்ணம் 2) ஷாடவ- ஸம்பூர்ணம்
3) ஷடவம் 4) ஸம்பூர்ண -ஔடவம்

45. இந்த இராகத்தில் வரும் கோமளஸ்வரம்
1) சதுஸ்ருதிரிஷபம் 2) அந்தரகாந்தாரம்
3) சுத்தமத்திமம் 4) காகலிநிஷாதம்

46. இவ் இராகத்திற்குப் பண்ணிசையில் வழங்கப்படும் பெயர்
1) சாதாஹரி 2) பழம்பஞ்சுரம்
3) பழந்தக்க இராகம் 4) செந்துருத்தி

47. இந்த இராகம் எடுத்துக் கொள்ளும் தீவிர ஸ்வரங்களின் எண்ணிக்கை
1) 3 2) 4 3) 2 4) 1

48. இந்த இராகத்தின் தாய் இராகம்
1) கல்யாணி 2) மாயாமாளவகௌளை
3) கரிஹரம்போஜி 4) சங்கராபரணம்

49. இந்த இராகத்தின் ஆரோகணத்தில் "ம"நீக்கப்பட்டு"க"சேர்த்தால் வருவது
1) ரேவதி 2) பிலஹரி
3) மோகனம் 4) ஹம்ஸத்வனி

50. இந்த இராகத்தில் அமைந்த உருப்படி
1)ஸ்ரீராஜராஜேஸ்வரி 2)நின்னருள்
3)ஸ்வாமி உன்னை 4)உள்ளமிரங்கி

51. A-அப்பியாசகானம்,சபாகானம் இரண்டிற்கும் பொதுவானஉருப்படி
B- ஐந்து அங்கங்களுடைய உருப்படி
C- இரண்டு பிரிவுகளை உடையது
D- கச்சேரிகளின் ஆரம்பத்தில் மத்திம காலத்தில் பாடஉகந்தது

மேற்குறிப்பிட்ட அம்சங்களையுடைய உருப்படி
1) வர்ணம் 2) பதம்
3) இராகமாலிகை 4) கீர்த்தனை

52. கர்நாடக இசைக்கச்சேரியின் பக்கவாத்தியமாக வாசிக்கப்படும் நரம்புக்கருவி
1)வயலின் 2)மிருதங்கம் 3)தவில் 4)தபேலா

53. ஸ் ரி த் ம் இப் பிரயோகம் அமைந்த ஸ்தாயி
1) அதிதரஸ்தாயி 2) அனுமந்திரஸ்தாயி
3) மந்திரஸ்தாயி 4) தாரஸ்தாயி

54. 8 என்ற குறியீடு குறிக்கும் அங்கம்
1) அனுத்ருதம் 2) குரு 3) காகபாதம் 4) ப்லுதம்

55. ஸா:கா:ரீ:மா: இக்கோவையின் அட்சர எண்ணிக்கை
1) 16 2) 8 3) 4 4) 6

56. கடபஜாதி ஸங்யைக்காகக் "காமவர்த்தனி"என அழைக்கப்படும் இராகம்
1) பந்துவராளி 2) சங்கராபரணம் 3) கல்யாணி 4) கரிகாம்போஜி

57. ஸரகிமபதநி என்ற ஸ்வரசங்கேதம் குறிக்கும் இராகம்
1) கரஹப்பிரியா 2) கரிகம்போஜி 3) தோடி 4) கல்யாணி

58. இரட்டைப் பெயர்களுடன் விளங்கும் ஸ்வரஸ்தானங்கள்
1) சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சதுஸ்ருதிதைவதம், கைசிகிநிஷாதம்
2) சதுஸ்ருதிரிஷபம், சாதாரணகாந்தாரம், சதுஸ்ருதிதைவதம், கைசிகிநிஷாதம்
3) சுத்தரிஷபம், அந்தரகாந்தாரம், சதுஸ்ருதிதைவதம், காகலிநிஷாதம்
4) சுத்தரிஷபம், சாதாரணகாந்தாரம், சுத்ததைவதம், கைசிகிநிஷாதம்

59. சரபநந்தனதாளத்தில் பல்லவி பாடியவாக்கேயகாரர்
1) தியாகராஜசுவாமிகள் 2) சியாமசாஸ்திரிகள்
3) முத்துஸ்வாமிதீட்ஷிதர் 4) புரந்தரதாஸர்

60. கச்சேரிகளின் இறுதியில் தோஷ நிவர்த்திக்காகப் பாடப்படும் இராகம்
1) மத்தியமாவதி 2) ஆனந்தபைரவி
3) கல்யாணி 4) பந்துவராளி

பகுதி 11

எல்லா வினாக்களுக்கும் விடைதருக.

1. வாத்திய ஸ்தரயத்தில் மூன்றாமிடம் வகிக்கும் தாளவாத்தியம் ?
..............................................................

2. பல இராகங்களால் அமைக்கப்பட்ட உருப்படி ?
..............................................................

3. பஸபஸ என்னும் ஸ்வரங்களுக்குத் தந்திகள் ஸ்ருதி கூட்டப்படும் வாத்தியம்?
..............................................................

4. முத்துத்தாண்டவர் பதங்கள் எவ்வாறு சிறப்பித்துக் கூறப்படுகின்றன.?
..............................................................

5. பல வாத்தியங்களின் கூட்டிசை எவ்வாறு அழைக்கப்படும்?
..............................................................

6. ஒருபக்கம் கழியினாலும் ஒருபக்கம் தடியினாலும் வாசிக்கப்படும் தாளவாத்தியம்?
..............................................................

7. முத்துஸ்வாமி தீட்ஷிதரின் முத்திரை யாது?
..............................................................

8. கோயில்களில் பள்ளியறைப்பூசையின் போது நாதஸ்வரத்தில் இசைக்கப்படும் இராகம்?
..............................................................

9. தியாகராஸஸ்வாமிகள் இயற்றிய இசைநாடகம் இரண்டு?
..............................................................

10. திஸ்ரஜாதி துருவதாளத்தின் மொத்த அட்சர எண்ணிக்கையை ஒத்தவேறு இருதாளங்களைத் தருக?
..............................................................